# செந்தமிழ்ப் பெருநாள்! சித்திரைத் திருநாள்!!

புத்தம் புதிதாம் ஆண்டினைக் கூற
புவியினில் வந்தது இந்நாள்!
புன்மை யிருளினைப் போக்கிடத் தோன்றிப்
புத்தொளி தந்தது இந்நாள்!
சித்தங் குளிர்ந்திடச் சேதிக ளிங்கு;
செப்பிடக் கூடிய திந்நாள்!
சென்றது பழமை; சேர்ந்தது புதுமை;
செந்தமிழ்ப் பாடிய நந்நாள்!

கண்களுக் கினிய காட்சிகள் கோடி
காட்டிட வந்தது இந்நாள்!
கவலைகள் யாவுங் கரைந்திட நெஞ்சம்;
களித்திட 'வைத்தது இந்நாள்!
மண்ணுல கெங்கும் மண்டிடு வோர்கள்
மனையகம் நிறைவே யாக;
மாதமிச் சித்திரை; யாண்டு 'பராபவ'
மலர்ந்தது; நிலையாய் வாழ்க!

முதித்தழ் முல்லை மொட்டுக ளவிழ
மோதிடுந் தென்றல் தாவும்!
மூடிய பனியை முற்றிலும் நீக்க;
மூன்வருங் கதிரோன் மேவும்!
சித்திரை யென்னுஞ் சீரிளங் கன்னி
செய்தனள் வசந்த காலம்!
செந்தமிழ் மக்கள் செல்வங்க ளூற்று;
செழித்திடு வாரிஞ் ஞாலம்!

நாடு செழித்திட; நன்மை கொழித்திட
நல்வர வாகிய திருநாள்!
நானில மெங்கும் நட்பினி லொன்றி
நனிசிறந் தோங்கிட வருநாள்!
கூடும் பசிப்பிணி குன்றி ஓடிட
குமரன் மனமே இரங்கி;
கொஞ்சுந் தமிழாற் கொடுக்கு மருளைக்
கொண்டு வந்ததிப் பெருநாள்!

வருமித் திருநாள்! வாழ்வே தரும்நாள்!
வடிவே லவனருட் காலம்!
வையம்; வானம் வளர்ந்தே பரவும்
வண்ணக் குமரனின் கோலம்!
உருகித் துதிக்கும் உள்ளத் தோர்க்கு
ஒருநாள் தொலையுந் துன்பம்!
உதய மாகிய சித்திரை இந்நாள்;
உலகத் தோர்க்கே இன்பம்!

— மெக்கேல்பட்டி, எம். பிலவேந்திரன்.

உ

முருகா.

## திருத்தணிகை மலை சித்ரா பௌர்ணமி

# அபிஷேகமும்

## ஸ்ரீ வள்ளி தேவசேனாபதி சமேத ஸ்ரீ முருகப்பெருமான்

## திருவீதி உலா உற்சவமும்

# திருவிழா அழைப்பு.

பேரன்புடையீர்!

நாளது பராபவ வருஷம் சித்திரை மாதம் 21-ந் தேதி (4—5—'66) புதன்கிழமை அன்று மாலை 6-மணிக்கு மேல் திருத்தணிகை மீதமர்ந்து அருளும் பவரோக வைத்தியநாதனும்; வைத்தியர்களுக்குத் தலைவன் ஸ்ரீ முருகவேளுக்கு சித்திரையீ முழு நிலாவில், ஆண்டு தோறும் வழக்கம் போல நடக்கும்,

## ★ அபிஷேக அலங்காரமும் ★

தீபாரதனைகளும், செய்வித்து அன்று இரவு உற்சவ மூர்த்தியை அலங்கரித்து மலைமேல் திருவீதியுலா உற்சவமும் நடக்கப்போகிறபடியால் தமிழகத்தின் தனிப்பெரும் தலைவனை புத்தாண்டின் தொடக்கமான முழு நிலவில் தரிசித்து, நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வத்தையும் பெற மூலிகை மணி சந்தா அன்பர்களையும், மற்றும் நம் நாட்டு மூலிகைகள் என்ற அடியேனின் கட்டுரையை வாசித்து உடல் நலம் பெற்ற எல்லா அன்பர்களையும் அன்புடன் அழைக்கின்றனன்.

அன்புள்ள அடியேன்,

**ஆ. இரா. கண்ணப்பர்,**

ஆசிரியர்: மூலிகை மணி, நம் நாட்டு மூலிகைகள்.

33-1, தென்னமரத் தெரு, வேலூர். (வ. ஆ.)

குறிப்பு:— சுவாமி தரிசனத்துக்கு நேரில் வரும் அன்பர்கள் அனைவருக்கும் உணவு, இடவசதிகள் செய்து தரப்படும். 3—5—'66 செவ்வாய்க்கிழமை அன்று மாலை 6-மணிக்கு மேல் திருத்தணி தெப்பக்குளம் மேலண்டை வாடையில் உள்ள வேலூர் வணிக வைசியாள் சத்திரம் தங்குமிடம். (தேவஸ்தான ஆபீஸ் பக்கத்து சத்திரம்) முழுநிலவில் முருகன் தரிசனத்தை ஆண்டு தோறும் கண்டு வருபவர்களின் வாழ்க்கை நோயற்று அமைதி நிலவும். அன்பர்கள் அனைவரும் வருக! வருக!!

உ

முருகா.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே

# மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே. - (தாயுமானவர்)

மலர் 2 விசுவாவசுஸு சித்திரை மீ (ஏப்ரல் 66) இதழ் 6

## "கண் கண்ட பொருளும் காணாத வஸ்துவும்"

உலகமும் அதிலுள்ள உயிரினங்களும், தாவர இனங்களும் கண்கண்ட பொருளாகும். ஆனால் இந்தக் காணும் பொருட்களான அண்ட சராசரங்களையும் இயக்குவிக்கும் ஓர் முழு முதற் சக்தி ஒன்று உளதல்லவா? இதுதான் காணாத வஸ்து. நமது உடல் காணும் பொருள். இந்த உடல் என்ற கருவியை உயிர் என்ற சூக்கும சக்தியால் ஆட்டுவிக்கிறது ஆன்மா! உடலை இயக்கும் சக்தி இருக்கிறதே இதுதான் காணாத வஸ்து.

உடல், மனம், இரண்டும் சேர்ந்துதான் மனிதன். எனவே மனிதனுக்கு நோய்கள் உண்டானபோது உடலை மட்டும் பற்றாது. முதலில் மனம், நோய்க்கு இடமளித்தால் தான் உடலில் நோய் பற்றும். "நோய்க்கு இடங்கொடேல்" என்கிறார் ஔவைப்பாட்டி. உடலுக்கு மட்டுமா இந்த அறிவுரை! மனத்தூய்மை இல்லாத ஓர் ஆரோக்கிய உடல் இருந்தென்ன பயன்?

தற்கால நவீன மருத்துவம் உடலுற்ற பிணிகளுக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கின்றன. உடலை ஓர் செயற்கை பொறிக்குச் சமமாக கண்கண்ட காரணங்களை முக்கிய ஆதாரமாகக் கொண்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றன. பொறிகளின் தேய்ந்த பாகங்களை கழற்றி வீசி எறிந்துவிட்டு புதியதாக வேறு ஒரு பாகத்தை பொருத்தி ஓட்டுவது போலாகிவிட்டது தற்கால நவீன மருத்துவங்கள். சமீபத்தில் மேல்நாடுகளில் மின்சாரத்தால் இயங்கும் இதயத்தை மனிதர்களுக்கு பொருத்தி ஆபரேஷன் செய்கிறார்களாம். இவர்களை எல்லாம் மனித மெக்கானிக்குகள் என்று அழைப்பதைவிட வேறு வார்த்தைகள் கிடைக்கவில்லை. இப்படி விஞ்ஞானக்கண்டு பிடிப்புகளின் நவீன கருவிகளைக்கொண்டு சில நோயாளிகளை பரிசோதனை செய்தும் அவர்களின் நோய் என்ன வென்பதையும், எங்ஙனம் இதற்குச் சிகிச்சை அளிப்பது என்பதையும் புரியாமலே வைத்து இருந்துவிட்டு (இன்கியூரபில்) தீராநோய் என்று திருப்பி அனுப்புவதையும் நாம் பார்க்கிறோம்.

மருத்துவமும், மருத்துவ சிகிச்சையும், தெய்வீக உணர்வும் நம்பிக்கையும் வேவ்வேறானது என்று வியாக்கியானம் செய்யும் அன்பர்கள் நமது நாட்டில் மலிந்து வருகிறார்கள். மருத்துவர் ஒரு முஸ்லிம் ஆக இருந்தால் அல்லாவை நினைத்துதான் மருந்து கொடுக்கிறார். சைவ, வைணவ, தமிழ் அன்பராக இருப்பின் முருகா! அம்பிகே! வெங்கடாசலபதி என நினைத்து அவரவர் மத கலாசார தெய்வங்களின் சக்திகளை முன்வைத்து தான மருந்துகளை நோயாளிக்கு கொடுப்பார்கள் அப்படி இன்றி "ஒஹோ! நான் படித்த மேதை, நான்தான் மருந்தை செய்தேன் நான்தான் நோயைக் கண்டுபிடித்தேன். என் மருந்தை சாப்பிட்டவர்களை சாவதில்லை, நான் சாக விடுவதில்லை, ஆகவே மருந்தைச் சாப்பிடு" என்று ஒருவரும் சொல்வதில்லை. சில நோய்கள் மருந்து தர வேண்டிய அவசியமின்றி இன்சொல், அன்பான வார்த்தை நல்லொழுக்கம், அருள் நெறி, ஆகிய நல்லுரைகளாலேயே விலகிவிடுகின்றன என்பது அனுபவபூர்வமான உண்மைகளாகும்.

வேலூரில் மருத்துவமனை ஒன்று இருக்கிறது. இது மேல்நாட்டு கிருத்துவ மத சங்கங்களின்ஆ தரவில் பெரும் மூலதனத்தைக் கொண்டு மக்களுக்கு சிகிச்சை செய்து பெரும் புகழ் அடைந்து விட்டது. உலகிலே அபூர்வமான பல நவீன சிகிச்சை அளிக்கப்படுவதாக சொல்லப்படும் இந்த இடத்தில் மதத்தின் அடிப்படையிலேதான் சிகிச்சை நடைபெறுகிறது. நோயாளி உள்ளே சென்றவுடன் 'யோவான்' 'மாத்யூ' 'லுக்காஸ்' சுவிசேஷங்களை படிக்க இலவசமாக வினியோகிக்கின்றனர். அது தவறு? அதன் பொருள் என்ன? — ஏ! மனிதப் பிறவி

எடுத்துப் பாவப்பட்டவனே ? உன் நோய்க்கு மருந்துகள் மட்டும் போதாது நீ செய்த பாவங்களின் விளைவுதான் நோயாகமாறி உன்னை வதைக்கிறது. எனவே பாவ மன்னிப்புக் கேள் ! கேளுங்கள் தரப்படும்! தட்டுங்கள் திறக்கப்படும்! என்று தான் தனது மதப்பிரசாரத்தை அறிவுரையாக வழங்குகிறார்கள். அதுமட்டுமா? இங்குள்ள உலகப் பிரசித்திப்பெற்ற நவீன சிகிச்சை நிபுணர்கள் கூட கத்தியை கையில் எடுக்கும் முன்பு தனது தலையிலிருந்து கையை மார்புவரை இறக்கி கையால் இருதோள்களையும் தொட்டு ஆண்டவனை அஞ்சலி செய்துக்கொள்ளுகிறார்கள். எந்த மருத்துவத்தில் மதப்பிரசாரம் இல்லை ? கூறவியலாது ?

நோய் இன்னதென்று தீர்மானிக்க இயலாத தீரா நோய்களுக்கு எல்லாம் திருநீறு மருந்து' என்பது சைவ சமயம் கண்ட பேருண்மை "திருநீற்றைப் பூசினால் நோய் போகுமா ? அருட்பா படித்தால் வியாதி போகுமா ? எனபது ஒரு அன்பரின் இடக்கான கேள்வி. அதிலும் இந்த ஐயப்பாட்டை ஒரு முஸ்லீம் அன்பரோ, அல்லது கிருஸ்தவ அன்பரோ கேட்டிருப்பின் ஆச்சர்யபடுவதற்கில்லை. தமிழ் அன்பர் கேட்டிருக்கிறார் என்றால் — இந்த வெட்கக்கேட்டை என்னவென்று உரைப்பது. இதுபோல திருநீற்றைக் கையில் எடுக்கும்போதே அடுத்தவர் குடியை கெடுகக நினைத்தால் எப்படி நோய் போகும் ?

திருநீற்றின் மகிமை தெரியாது உளறிக் கொட்டும் மாக்களே திருநீற்றால் தீராத பல ரோகங்கள் நீங்கிப்போய் இருக்கிறது. சென்னை கந்தக் கோட்டத்து சுவாமிக்கு வெள்ளி ரதம் செய்து விழா நடத்தினார். திருவலம் மவுனகுரு சுவாமிகள். எந்த மூலதனம் இருந்தது அவருக்கு ? மதப்பிரசாரத்துக்கென அயல் நாட்டிலிருந்து பணம் கிடைத்ததா? அவரிடம் என்ன இருந்தது ? **ஒரு ஓட்டை மண் சட்டியில் விபூதியும் வில்வமும் தான் இருந்தது. தன்னை நாடி வந்த நோயாளிகளிடம் இதை தான் கொடுப்பார்.** தனக்கென்று வாழாதவர்கள் யாரோ ! அவர்கள் என்ன நினைத்தாலும் நடக்குமே ! தற்போது திருத்தணிகை எம் பெருமானுக்கு ரதம் செய்ய ஏற்பாடு செய்து வருகிறார் மவுனகுரு சுவாமிகள்.

ஆங்கில மருததுவம் பயின்றும், வெளிநாடுகளுக்குச் சென்று பல பட்டம் பெற்று திரும்பிய மருத்துவ மேதை, சென்னை பிரபல டாக்டர் **திரு. ரத்தினவேல் சுப்பிரமணியம்** அவர்கள் கூட திருநீற்றைப் பழிக்காமல் தனது நெற்றியில் விபூதி குங்குமம் அணிந்து ஸ்ரீ முருகனின் பக்தராக விளங்குகிறார் என்றால், திருநீறு மகிமையறியாத மண்டூகங்களுக்கு என்னத்தான் கூறினாலும் மர மண்டையில் ஏறுமா ?

# ★ மானிட உடலியல் ★

[G. S. பசுபதி, B.A., L.T.,]

அரிது, அரிது, மானிடராய் பிறத்தலரிது என்கிறது ஓர் முதுமொழி. ஆம், பிறத்தற்கரிய பிறப்புதான். உத்தமமான இப்பிறப்பில் பல விசேடப் பண்புகள் உள. மனிதனுக்கு ஆறும் அறிவும் உள்ளது. பிராணிகளுள் மனிதன் ஒருவனே சிரிக்கும் ஆற்றல் பெற்றவன். உயிர்ப்பொருள்களின் பரிணாமத்தின் உச்சநிலையை அடைந்திருக்கின்றான் மனிதன். வியப்பிற்குரிய அரிய சாதனைகளில் வெற்றியும் கண்டிருக்கிறான்.

இத்தகைய உத்தமப்பிறவியில் 'நோயற்ற வாழ்வை' நாம் எல்லோரும் விரும்புவது இயல்புதானே! ஆனால் நம் வாழ்வில் ஏதாவது ஒரு காலத்தில் ஏதாவது ஒரு நோயாவது நம்மைப் பீடித்து நம் இன்பத்திற்கு பங்கம் விளைவிக்கலாம். நோயற்ற வாழ்வு பெற்றால் தான் உலகத்தின் இன்பங்களை நன்கு நுகரமுடியும் என்பது கண்கூடு. நம்மால் கூடுமானவரை நோயை வராது தடுக்க முயற்சிக்க வேண்டியது நம் கடமை. நமக்கும் அப்பாற்பட்ட சக்திகளால் நோய் நம்மைத் தாக்குவதும் உண்டு. ஆனால் பெரும்பாலான நோய்களை நாம், நம் முன்ஜாக்கிரதையால், தடுக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளுதல் நம்மால் சாத்தியமே!

வேறு எதைப்பற்றித் தெரிந்துக்கொள்ளாவிடினும், நம் உடல் அமைப்பைப் பற்றி, எளிய முறையில் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள

— (5-ம் பக்கத் தொடர்ச்சி)

விபூதியின் மகிமை தெரியாமலும் வேண்டுமென்மென்றே பழிப்பவர்களும், ஒருக்காலும் கடைத்தேற இயலாது.

'சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும் திருப்புகழ்
நெருப்பென்றறிவோம் யாம்''

என்று அருணகிரி நாதர் சொன்னபடி திருநீற்றை அவமதிப்பது நெருப்புடன் விளையாடுவதற்கொப்பாகும். நெருப்பை அறிந்தோ அறியாமலோ தொட்டால் அதன் பலன் உடனடியாகவே கிடைக்கும் என்பதை எச்சரிக்கை செய்கிறோம்.

வேண்டியது முக்கியம்தானே! ஆகவே, இக்கட்டுரையில் நம் உடல் கூறு இத்தகையது என்பதை சாதாரணமாக, யாவரும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில், தெளிவுபடுத்த முயற்சிக்கிறேன்.

மனிதனின் உடலமைப்பைப் பற்றிக் கூறும் நூலுக்கு, ஆங்கிலத்தில் Anotomy என்று பெயர். உடலிலுள்ள பல்வேறு உறுப்புக்கள் மேற் கொள்ளும் அலுவல்களைக் கூறும் நூல் 'மானிட உடல் நூல்' (Human Physiology) எனப்படும்.

வீடு கட்டப்படும்பொழுது உபயோகிக்கப்படும் பலவகை பொருள் களைப்போல், அநேக சிக்கலான பொருள்களாலானதுதான் இந்த உடல். இதற்கு அடிப்படை அமைப்பாக விளங்குவதுதான் 'புரோட்டோபிளாசம்' (Protoplasam) என்ற மிகச்சிக்கலான கூட்டுப்பொருள். இப்பொருளில் இருந்து தோன்றுவது 'செல்' (Cell) எனப்படும். பல செல்களின் தொகுதிக்கு 'திசு' (Tissue) என்று பெயர். இத் திசுக்கள் பலவகைப் படும். அவற்றுள் சில : தோல் திசு, நரம்புத் திசு, பாய்பொருள் திசு, (இரத்தம் போன்றது), தசைத்திசு, எலும்புத்திசு, நெகிழும்திசு, (இரத்தக் குழாய்கள் முதலியன) நார்த்திசு, இணைப்புத்திசு, என்பவை.

மனித உடலிலுள்ள உறுப்புக்கள் மேலே கூறப்பட்டுள்ள பலவகை திசுக்களால் ஆக்கப்பட்டவை. இவ்வாறு பலதரப்பட்டுள்ள உறுப்புக்கள் ஒன்றொடொன்று ஒத்துழைத்து, அலுவல்களை மேற்கொள்ளும். இம்மாதிரி ஒத்துழைத்து, ஒன்றுகூடி, ஒரே அலுவலில் ஈடுபடும், உறுப்புக்களின் தொகுதிக்கு, மண்டலம் (System) என்று பெயர்.

நம் உடல் உறுப்புக்களை முக்கியமாக, ஒன்பது மண்டலங்களின் கீழ் கொண்டு வரலாம்.

அவையாவன :-

(1) எலும்பு மண்டலம் : (Skeletal System) உறுப்புக்களைத் தாங்குவதும், அசைவுகளுக்கு உதவுவதும்.

(2) தசை மண்டலம் : (Muscular System) உடலின் சமநிலையை மேற்கொண்டு, அசைவுகளை உண்டுபண்ணும்.

(3) இரத்த சுழற்சி மண்டலம்: (Vascular System) உடலிலுள்ள திரவப்பொருள்களை பல்வேறு பாகங்களுக்கு எடுத்துச்செல்லுதல்

(4) சுவாச மண்டலம்: (Respiratory System) வாயு மாற்றங்களை ஏற்படுத்துதல்.

(5) சீரண மண்டலம்: (Digestive System) நாம் உட்கொள்ளும் உணவை மாற்றி சக்தியை உண்டு பண்ணுதல்.

(6) கழிவு மண்டலம்: (Excretory System) தினசரி நம் உடலில் ஏற்படும் கழிவுகளை அவ்வப்போது வெளியேற்றுதல்.

(7) இனப் பெருக்க மண்டலம்: (Reproductive System) மானிட இனத்தை தொடர்ந்து வளர்த்தல்.

(8) நரம்பு மண்டலம்: (Nervous System) உணர்ச்சிகளை ஏற்று, அவற்றிற்கேற்ப கட்டளைகளை விடுத்தல். எல்லா உறுப்புக்களையும் ஏவி, அவற்றின் அலுவல்களை கண்காணித்தல்.

(9) நாளமில்லா சுரப்பிகள் மண்டலம்: (Endocrine System) உடலின் அலுவல்களை சரிவர நிறைவேற்றத் தேவையான சுரப்பு நீர்களை (பொருள்களை) (Hormones) தயாரித்தல்.

இம்மண்டலங்களைப்பற்றி ஒருவாறு தெரிந்து கொள்வோமேயானல், மூலிகைகளும், மற்ற மருந்துகளும் எவ்வாறு நம் உடல் உறுப்புக்களில் சேர்ந்து, வேலை செய்து நோய்களைக் குணப்படுத்தும் என்பது பற்றி புரிந்து கொள்வது எவ்வளவு சுலபமாக இருக்கும்!

அடுத்து வரும் 'மூலிகை மணி' இதழ்களில் இம்மண்டலங்களைப் பற்றி இன்னும் சற்று விரிவாக தெரிந்து கொள்ள முயலுவோம்.

## மந்திரமாவதும் நீறு, மருந்தாக ஆவதும் நீறு!

மனிதன் இறந்த பின்பு அவனை சுட்டெரித்தால் அச்சாம்பலில் 12 வித தாது உப்புக்களை பிரித்தெடுக்கலாம். மனிதன் உயிருடன் ஜீவிக்கும்போதும் இந்த தாதுக்களின் கூட்டுறவால்தான் வாழ்கின்ருன். எனவே, இந்த பனிரெண்டு தாது உப்புக்களையும் அளந்து எது குறைவு? எது அதிகம்? என்பதைக் கண்டு பிடித்து கொடுக்க மனிதன் வியாதியற்று ஆரோக்கிய வாழ்வைப் பெறுவான்.

— டாக்டர் சூஸ்லரின் பயோ கெமிஸ்டிரி.

உ

முருகா.

# நம் நாட்டு மூலிகைகள்

## "80 - வது கட்டுரை"

பிரம்ம விருக்ஷம் என்ற தலைப்பில் முருங்கை மரத்தைப் பற்றி தினமணி சுடரில் 1963ல் எழுதியது வாசக அன்பர்களுக்கு நினைவு இருக்கலாம். முருங்கையில் கலியாண முருங்கை என்ற ஓர் மர வகுப்பும் உள்ளது. முருங்கை மரத்தைத் தெரிந்த அளவுக்கு இந்த கலியாண முருங்கையை அனைவரும் தெரிந்து வைத்திருக்க முடியாது. ஏனெனில் இதன் இலையோ, மற்ற பாகங்களோ உணவாக பயன் படுவதில்லை.

ஆனாலும் பள்ளிச் சிறுவர்களுக்குத் தெரிந்த மரம்தான் கலியாண முருங்கை! இப்படியாகச் சொல்லிக் கேட்டால், அவர்களும் எனக்குத் தெரியாதே! என்றுதான் சொல்லி விடுவார்கள். ''தம்பி உனக்கு நெருப்புக் கொட்டை மரம் தெரியுமோ? என்றால் ஓ... தெரியுமே, எங்கள் பள்ளித் தோட்டத்திலும் இருக்கிறதே என்பார்கள். இந்த கொட்டையை காரை அல்லது சிமிட்டித் தரையில் தேய்த்து பக்கத்து பையன் தொடையில் வைத்து விடுவான். உடனே அவன் எழுந்து, சார்......... நெருப்புக் கொட்டையை தேய்த்து வச்சுட்டான் என்று ஒற்றைக் காலில் குதிப்பான். ஆசிரியர் சூடு வைத்தவனைக் கூப்பிட்டு பிரம்பால் ஒரு சூடு போட்டுச் சமாதானம் செய்வார். பிறகு, சார் இவன் கிட்டே நெருப்புக்கொட்டை இருக்கு என்று ஒருவர்க்கொருவர் கோள் சொல்லி நெருப்புக் கொட்டை எல்லாம் மேஜை மேல் குவியும். பையன்களுக்கு பிரம்படியும் சுரீர் சுரீர் என்றுதான் விழும். நெருப்புக் கொட்டை சூடும் சுரீர் என்றுதான் இருக்கும். இத்தகைய காரணங்களால் (நெருப்புக் கொட்டை மரம்) கலியாண முருங்கை மரம் பள்ளிச் சிறுவர்களுக்கு மிக நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு விட்டது!

இந்த கலியாண முருங்கை பார்ப்பதற்கு பூவரசமரம் போலக் காணப்படினும் முருங்கை இனத்தைச் சார்ந்ததே. விதையில் இருந்தும் பயிராகும். அல்லது பெருமரக் கிளையை ஒடித்து நட்டு வைத்து தண்ணீர் கட்ட முருங்கை கிளை போலவே குருத்து விட்டு முளைக்க ஆரம்பமாகும். இந்த மரத்தில் சிகப்பு நிற பூக்களை விடும் கலியாண முருக்கும் உள்ளது. சுத்த வெள்ளை நிற பூக்களை விடும் மரமும் உள்ளது இவ்விரண்டும் நிறத்தல் வித்தியாசமே தவிர, குணம் ஒன்றுதான். பூக்கள் கிளைகளின் முனையில் கொத்துக் கொத்தாக கற்ருழை மடல் போல் இரண்டங்குல நீளத்தில் ஒரே இதழ் விரிந்து அதன் எதிரிலே 5 (அ) 6 மகரந்தக் காம்புகளையுடையதாகி, இதழ்கள் மேல்நோக்கி காதுகள் போல நீட்டி இருக்கும், இதழ்கள் உதிர்ந்ததும் அதிலிருந்து நீளமான பிஞ்சுகள் பச்சை நிறமாக காய்க்கும். இதன் காய்கள் முருங்கைக்காய்கள் போலவே இருக்கும் ஆனால் சமையலுக்கு உதவாது. உலர்ந்தபின் காய் கறுப்பு நிறமாகி உள்ளே இருக்கும் நெருப்புக் கொட்டை சலசல என்று ஆடும். கலியாண முருக்கன் இலை,பூ முருங்க இலை, பூபோல் இல்லை எனலாம் இலை பூவரசன் இலைபோல் ஒரு காம்புக்கு மூன்று இலைகளுடன் காம்பு நீளமாக இருக்கின்றது.

# நெருப்புக் கொட்டை மரம்
## (எ) கலியாண முருக்கன்

இந்த மரம் உணவாக பயன்படா விட்டாலும் மருத்துவ பயனாக பரம்பரை வைத்தியர்களுக்கு பயன்பட்டு வருகிறது, பொதுவாக பித்த சிலேத்தும பிணிகளுக்கு சூட்டைத் தணித்து மலத்தை வெளித்தள்ளி, கோழையை அகற்றும் சக்தி கொண்டதாகும். மேலும் புழுக்களையும், கிருமிகளையும் இதன் இலைச்சாறு அழிக்கும் தன்மை கொண்டதாகும். பித்தமதிகரித்து வந்த நீர் தடைகளை நீக்கி சிறுநீரை பெருக்கித் தள்ளவும் பெண்களுக்கு காணும் சூதக தடையை நீக்கி, வாய்வை கண்டிக்கும். மருத்துவப் பயனாக சிகப்பு பூ மரத்தைக் காட்டிலும் வெள்ளைக் கலியாண முருக்கனே சிறந்தது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

### குழந்தை வியாதிகளுக்கு

வெள்ளைக் கலியாண முருக்கன் இலை குழந்தை வியாதிகளுக்கு மிகுந்த பயன்தரவல்லது. குப்பைமேனிச் சாற்றைப் பிழிந்து புகட்டுவது

போல குழந்தைகளுக்கு புகட்டுவதும், நமது நாட்டு வழக்கமாகும். இதனுல் குழந்தைகளுக்கு வாந்தியாகி வயிற்றில் உள்ள புளிப்பு கோழை கபக்கட்டு நீங்கி, நல்ல பசியும் ஜீரணசக்தியும் உண்டாகும். குப்பைமேனி சாற்றை பிறந்த குழந்தை முதல் 4 மாதம் வரையில் புகட்டமாட்டார்கள்




ஏனெனில் அதன்வேகம் சிசுக்கள் தாங்காது. ஆனுலும் இந்த வெள்ளை கலியாண முருக்கன் இலைச்சாற்றை பிறந்த 1 மாதகுழந்தைக்கு 10 துளி 10 துளி வெண்ணீர் கலந்து புகட்ட கஷ்டமில்லாமலும் எளிதாக

வயிற்றை சுத்தம் செய்து குழந்தையின் மந்தத்தைப் போக்குவதுடன் வயிற்றில் உள்ள சகல விதமான பூச்சிகளையும் வெளியேற்றிவிடும். 6 மாதம் முதல் 1 வருடக்குழந்தைகளுக்கு $\frac{1}{2}$ முதல் 1 தேக்கரண்டி கொடுக்கலாம். அஜீர்ணம் மந்தம் இருக்கும் போதெல்லாம் இப்படியே பயன்படுத்த நல்ல குணம் காணும்.

## பெண்களுக்கு ருது சூலைக்கு

இதன் இலைச்சாற்றை முருங்கை இலைச்சாற்றைக் கொடுப்பது போலவே தினமும் 10 நாளைக்கு தவறுமல் கொடுக்க மாதவிடாய்க்கு முன்பும் பின்பும் காணும் கடுமையான வயிற்றுவலி நீங்கிப்போகும்.

## ஆஸ்துமா வியாதிகளுக்கு

நுரையீரல் சம்பந்தப்பட்ட காசநோய்களான ஆஸ்துமா இரைப்பு நோய்களுக்கு முன் காலத்தில் கைகண்டமுறை இந்தஇலையில் இருந்ததாக பல ஏட்டுச்சுவடியில் காணக்கிடக்கின்றன, அன்மையில் ஒரு ஆஸ்துமா கண்ட நாள்பட்ட வியாதியஸ்தருக்கு கையாண்டு பூரணகுணமும் கண்டு உள்ளது, முறை விபரம் : வெள்ளைகலியாண முருக்கன் இலையை இடித்து பிழிந்து சாறு ஒரு சங்களவு (1 அவுன்ஸ்) வெங்காயத்திலே வெள்ளை ரகம் உள்ள (சிவப்பு நிறம் கூடாது) வெங்காயத்தை இடித்துப் பிழிந்த சாறு ஒரு சங்களவு புழுங்கலரிசியை கழுவி சோறு வேகும் போது கொதிக்கும் நீரில் இரண்டு சங்களவு ஆக நான்கு சங்களவும் ஒரு சிறிய குவளை (டம்ளர்) ஆகும் இதை ஒன்ருகக் கலந்து காலை வேளை மட்டும் இளஞ் சூடாக நாள்தோறும் பருகி வரலாம். நாள்பட்ட இரைப்பு காசம் கூட இதனுல் பூரணமாக ஒழியும் என்பதில் ஐயமே இல்லை (மாமிச உணவு புகை போகம் கூடாது.)

## சிறுநீர் எரிச்சல் நீங்க

தினமும் 1 தேக்கரண்டி இதன் இலைச்சாற்றை மோரில் கலந்து குடித்துவர மூத்திரதாரை அழற்சி சிறு நீர் எரிச்சல் அடங்கி சூடு தணியும்

## சர்ம ரோகங்களுக்கு நிகரற்றது !

வெள்ளை கலியாண முருங்கை தெரியாதவர் வைத்தியராக இருக்க முடியாது என திடமாக கூறிவிடலாம். தமிழ் நாட்டில் சர்வமேக ராஜாங்க எண்ணை என்ற ஓர் முறை. இது அந்தந்த ஊரில் பிறந்த பரம்பரை வைத்தியர்களால் கையாளப்படுவதால் அந்த ஊர் பெயரே

இந்தஎண்ணெக்கு வைத்துவிட்டார்கள். இம்மாதிரியான மேகஎண்ணெகள் தயாரிக்க வெள்ளை கலியாண முருக்கன் இல்லாவிட்டால் அந்த எண்ணெ ஒருவித பயனும் தராது. எந்தவித சர்ம ரோகங்களுக்கும் எண்ணெ ரூபத்தில் காய்ச்ச இதன் இலை ஓர் அரசனைப் போன்ற துணை யாகும். தீராத பல கரப்பான், சொறி, சிறங்கு, படைகளுக்கும் சிகை அலங்கரித்து சிங்காரம் செய்துவிடும் சலூன்காரர்கள், தொற்று புண்கள் பல முகங்களில் பட்டுவந்த கத்திப்படைச் சொறிகள் ஆகிய சர்ம புண்கள் தீரவேண்டுமா? முறை விபரம்: வெள்ளை கலியாண முருக்கன் இலையை 1 பலம் முற்றிய தேங்காய் பருப்பு 1 பலம், சிறிய துண்டு மஞ்சள் இவைகளை நன்ருக மைபோல அறைத்து இரவு வேளைகளில் மேலே பற்று போட்டு வைத்து காலையில் குளித்து வர யாவும் மறைந்து விடும். குப்பை மேனிக்கு நிகரானது. உள்ளுக்கும் இதன் இலைச்சாற்றை மட்டும் இரண்டு தேக்கரண்டி தினம் ஒரு வேளை சாப்பிடுவது, மலத்தை இளக்கி கிருமிகளைக் கொன்று சர்ம ரோகத்தை விரைவில் குணமாக்க உதவுகிறது.

## சுகபேதியாகி மலக்கட்டு நீங்க

ஆண்டுக்கு இருமுறை வயிற்றைச் சுத்தப்படுத்திக் கொள்ளுவது என்பது நமது நாட்டு மருத்துவ விதி. தற்காலத்தில் கண்ட மாத்திரை மருந்துகளை பேதிக்கு சாப்பிட்டு குடல் கோளாறுகளுக்கு ஆளாகி விடு கிருர்கள், கலியாண முருக்கன் இலைச் சாற்றை இடித்துப் பிழிந்த சாறு இரண்டு அவுன்ஸ், $\frac{1}{2}$ அவுன்ஸ் சோற்று உப்பு சேர்த்து கலக்கி காலை வெறும் வயிற்றில் குடிக்க, இரண்டு முதல் நான்கு தரம் மலநீராக்கி பேதி யும், 1 தரம் கபம், பித்தம் கழிய வாந்தியும் ஆகி சுகநிலைக்கு உடலைக் கொண்டு வரும். அதிகம் பேதி ஆனுல் மோர் குடிக்க பேதி நின்று போகும். அபாயம் இல்லாத சுகபேதி பழங்காலமுறை இதுவே. ஆனுல் இம் முறையை கருவுற்ற மாதர் (கர்ப்பிணிகள்) சாப்பிடலாகாது என்பதை நினைவு படுத்துவதும் நல்லதே.

## பூச்சிகள், மலப்புழு சாக

நெருப்புக்கொட்டை என்று சொல்லப்படும் இந்த மரத்தின் விதை வயிற்றில் உள்ள கிருமி, மலப்புழுக்களைக் கொல்லும் சக்தி கொண்டது: முறை விபரம்: விதைக் கொட்டையை உடைத்து மேல் தோல் நீக்கி, இடித்துத் தூள் செய்து கொண்டு 5 அரிசி எடை மேல்படி இலை சாற்றில் கலந்து சாப்பிட குடல் பூச்சிகள் வெளியே வந்து விழும்.

உ
முருகா.




—(சென்ற மாதத் தொடர்ச்சி)

# "நடமாடும் ஜீவ நஞ்சுக்கள்"

## ★ இயற்கை வெறி ★

அஃறிணை ஜீவன்களுக்கு இயற்கையாகவே வெறித்தன்மை உண்டாகி விடுமாயின் அந்த நஞ்சு தீராதததும் பிற உயிரினங்களுக்கு பேராபத்தை விளைவிக்கக் கூடியதுமாகும். மிகுந்த விசுவாசமும் அன்புடன் வளர்க்கப்பட்ட நாய்க்கு இயற்கை வெறி ஏறிவிட்டால் அதற்கு இரக்கம் அன்பு செலுத்தினல் என்ன கதியாகும், மனிதர்களுக்கும் சிலர் பரம்பரை தொடர்பில் இந்த வெறிக்குணம் தொடர்வதும் காண்கிரேம். மிகப் பழமையான காலத்தில் இயற்கையில் உண்டாகும் வெறிக்குணம் மனிதர்களுக்கு பாதிக்கும் சமயம் அரைப்பத்தியம்போல் வாழ்க்கையில் ஒட்டாமல் ஒட்டி ஜீவித்து இருந்தும் வாழ்நாளைக் கழிப்பார்கள். ஆனுல் இந்த விதமான இயற்கை வெறிக்குணம் படைத்த மனிதர்கள் இன்னுரென்று தெரியமுடியாத அளவுக்கு நவீன மருந்துகளின் வெறிச்செய்கை மூடி மறைத்து விட்டது. இந்த வித இயற்கை வெறிக் குணம் நவீன மருந்துகளாலும் பலவித விஞ்ஞான கருவிகளாலும் உள்ளடக்கப்பட்டு வாழ்க்கையில் எப்போது தெரிகிறது என்ருல்? நிறை வேருத ஆசாபாசங்கள், தாங்க முடியாத சந்தோஷம் அல்லது துக்கம்

திடீர் அதிர்ச்சி தரும் விஷயங்கள், ஆகியவைகளை பார்க்கும்போதும், கேட்கும்போதும் இதயம் படீரென்று வெடித்து உயிரைக்குடித்துவிடுகிறது மனிதனைத் தொடர்ந்து வரும் இயற்கை வெறி. இந்த இயற்கை வெறி யோடு செயற்கை மருந்துகளின் வேகமும் சேரும்போது உடல் உறுப்புகள் தாதுக்கள் தளர்வடைந்து நாளடைவில் ஒரு சிறிய சப்தம் கேட்டாலும் உடல் நடுக்கமும் கொண்டு இதயம் நடை சீர்கேடு அடைகிறது. எனவே இந்தவித குணம் பின்சந்ததிக்கும் பற்றி இளம் பிள்ளை வாதம் டி. பி. என்ற க்ஷயம் மாரடைப்பு என்ற வியாதிகளோடு போராடி அற்பாயுள் சமுதாயமாக மாறிவிட்டது.

இயற்கையாகவே வெறிகுணம் கண்ட அஃறிணை ஜீவன்களை, மனித சமுதாயம் உடனே பிறருக்கு அந்த தீங்கு வராதவண்ணம் அவைகளை அழித்து விடுகிறது. ஆனால் மனிதர்களுக்கு இயற்கை வெறி வந்து விட்டால் அவனுக்கு சிகிச்சை அளித்து, வாழவைக்க முயற்சிக்கிறது. இயற்கை வெறி வழி வந்த மனிதனை சமுதாயத்தோடு வாழவைப்பதும் அவனுக்கு திருமணம் செய்து குடும்பஸ்தனுக்கிவிடுவதும் மேலும் சமுதாயத்தை நாற்றம் அடிக்கும் சாக்கடை போலச் செய்வதாகும். தற்காலம் இயற்கை வெறி பிடித்தவர்களை பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் அடைக்கிறார்கள். இந்த வெறிகுணம் படைத்த மனிதர் களில் இயற்கைவெறியர் யார் என்பதை கண்டறிந்து பாகுபாடு செய்வதில் மிகுந்த திறமை வேண்டும். செயற்கை வெறியால் பாதிக்கப்பட்டவர்களை பலகாலம் பரிசோதனைக்குட்படுத்தி நடை உடை பாவனைகளைக் கவனித்து பின்பு சமுதாயத்துடன் வாழ சந்தர்ப்பம் அளிக்கலாம். ஆனால் குடும்பத் தொடர்புடையதும் பரம்பரை வழி தருவதையும் இயற்கை வெறி என்று தீர்மானிக்கப்பட்ட மனிதப் பைத்தியங்களை மக்கள் சமுதாயத்தோடு இணைத்து பழகவோ அல்லது வாழ்க்கை தருவதோ பெரும் தீங்குதான் விளையும் இதுபோலவே ஆங்கில மருந்துகளுக்கும், அதன் நஞ்சுகளுக்கும் ஆளாக்கப்பட்டு அளவுக்கு மீறிய மருந்துண்ட செயற்கை வெறி குணமும் இயற்கை வெறி குணத்துக்கு இணையானதே! எனவேதான் இத்தகைய நோயாயாளிகளுக்கும் நாட்டு மருத்துவச் சிகிச்சையோ அல்லது இயற்கை சிகிச்சையோ கூடாது என்பது, இதனால் சமுதாயமே அற்பாயுசு ஆகக் கூடும் என்பது கருத்து. அஃறிணை ஜீவன்களுக்கு இயற்கை வெறிகுணம் கண்டபோது எப்படி அதை ஒதுக்கிவிடுகிறோமோ அது போலவே உயர்திணையான மனித சமுதாயத்தையும் மதிக்கப்படல் வேண்டும்.

## இயற்கை வெறிகுணமும் குறியும்

மனிதர்கள் கடிப்பதின் வெறி லட்சணம் வாயில் இருந்து நீர் சோப்பு போட்ட நுரைபோல் பெருகி வருதல், மாரடைத்துக் கொள்ளல், பயங்கர

மான ஓசையால் கூச்சலிடுதல், தூக்கமின்மை பசிதாகம் இல்லாமல் பல நாட்கள் இருத்தல் கண்கருவிழி பூமிக்கு ஆகாயத்திற்கு சுழலுதல் என்பதால் அறியலாம்.

## நாய் கடியின் இயற்கை வெறியின் நஞ்சு

வாயில் நுரைதள்ளுதல், நாய் குரல்போல் தொடர் ஓசையில் குரைத்தல் வியர்வை பிசுபிசுப்பாக இருத்தல் ஆகியவையாம்.

## நரிக்கடி இயற்கை வெறியின் நஞ்சு

நரி ஊளையிடுதல் போன்று கூச்சலிட்டு கத்துதல், உடல் உஷ்ண மாகி வியர்வை வராமல் போகுதல், வாயில் உள்ள நீர் எல்லாம் வரட்சி யடைந்து நீர் இல்லாமல் போகுதல். (தொடரும்)

---

# அடுத்த இதழில்
# நீங்கள் ஆவலுடன் எதிர்ப்பார்க்கும் மூலிகை!
(81-வது கட்டுரை)

---

—(13-ம் பக்கத் தொடர்ச்சி)

## தாது புஷ்டிக்கு

இதன் வேர் பட்டையை உலர்த்தி இடித்ததூள், நிலப்பனங்கிழங்கை உலர்த்தி இடித்த தூள் சம அளவு கலந்து வைத்துக்கொண்டு இரவில் படுக்கும் போது பசும் பால் காய்ச்சி இளம் சூட்டுடன் மேல்படி தூளை நான்கு சிட்டிகை வாயிலிட்டு மாலைக் குடித்துவர குடும்பத்தில் கலியாண மானவர்களுக்கு நிர்வாகம் உண்டாகி சுக்கிலம் பலப்படும். இதன் வேரில் கஷாயம் போட்டு 40 நாள் குடிக்க டயாபடீஸ் என்ற நீரிழிவு குணமாவ தாகக் கூறப்படுகிறது.

திருமண சடங்குகளுக்கு கலியாணம் என்ற பெயர். ஆனால் இந்த மரத்துக்கு கலியாண முருக்கன் என்ற பெயர் வரக் காரணம்? ஆண், பெண் இரு பாலருக்கும் மருத்துவப் பயனாக ஆகும் இதனை கலியாண முருக்கன் என்ற காரணப் பெயராலேயே அழைத்து இருக்கக் கூடுமல்லவா?

★ வாழ்க நெருப்புக் கொட்டை. ★

(முற்றும்)

உ
முருகா.




[இந்தப் பகுதியில் வாசக அன்பர்கள் தங்களின் வினுக்களை தாராளமாக எழுதி அனுப்பலாம். கூடுமானவரை பலருக்கும் பயன்தரும் கேள்விகளே முதலிடம் பெறும். ரகசிய கேள்விகளை குறிப்பிடும் அன்பர்கள் பெயரைக் குறிப்பிடமாட்டாது. கேள்விகளை எழுதும்போது தெளிவாகவும், முழு விலாசமும், வயதும் குறிப்பிட வேண்டும்.]

கே - வைத்திய சித்தரே! வணக்கம். எனக்கு இப்போது வயது27. நான் 16 வயது முதலே முகசவரம் செய்துகொள்ள் பழகினேன். பள்ளிப் படிப்பின்போது ஒரு சலூன்காரர் நண்பர் ஆனுர். ஆகவே தினந்தோறும் சவரம் செய்து கொண்டு போவேன் (ஓசியில் தான்) இப்போது திருமணமாகி குடும்பஸ்தனுகிவிட்டேன். நகரவாழ்க்கை, செலவுஅதிகம், வருவாய் போதவில்லை, ஒரு சேவிங் பெரிய சலூனில் எட்டணு வர்ங்கிவிடுகிருர்கள். சிறிய சலூனுக இருந்தால் நாலணு, அதற்கு குறைந்த சலூன் கிடையாது. எனது தலை ரோமத்தை விட முகத்தின் தாடையில் வரும் ரோமம் கம்பி போலவும், முகம் கரடு முரடாகவும், ரோமம் வேகமாகவும் வளருகிறது. சேவிங் செய்த இரண்டாம் நாள் முகத்தை தடவினுல் பிரஷ் போல் கை கூசுகிறது. தானுகவே செய்துக்கொண்டால் மிச்சமாகும் என்று ரேசர் செட் வாங்கினேன். முகத்தில் சோப்பு தடவி இழுத்தால் வலி பொறுக்க

முடியவில்லை இந்த தர்ம சங்கடமான நிலை நீங்கவும், ரோமம் வெகு சீக்கிர மாக வராமல் இருக்கவும் ஒரு நல்ல மார்க்கம் தங்களால்தான் கூறமுடியும் என்ற நம்பிக்கையில் எழுதுகிறேன். வேதனை தீர பதில் கூறுங்கள்.

ப - தம்பி, ஓசியில் வந்த விளைவுதான் இந்த துன்பம்! முன்பு எல்லாம் முதன் முதலாக சிகையில் கத்தி வைப்பதாக இருந்தால் நாள், நக்ஷத்திரம், கிழமை, திதி, பார்த்து சுவாமி சன்னதி, மலைக்குப் போவது, மொட்டை அடிப்பது, காதணி விழா போன்றவைகளால் நீக்குவார்கள். ஆனால் காலம் தான் நவீன பாணியில் வெகு வேகமாக மாறி வருகிறதே! சலூன்! சுழல் நாற்காலி, மின்சார விசிறி, அலங்கார, வாசனை திரவியங் கள் என்ன? குளித்துச் சாப்பிட்ட பின்பு அல்லவா இப்போது சலூனுக்குப் போகிறார்கள். அதிலும் நேரம், காலமே இல்லை. இந்த வகையில் உனது முகமும் கரடு - முரடாகி விட்டது. கத்தி பட்ட இடமெல்லாம் ரோமம் செழித்து முரடாகத்தான் வளரச் செய்யும். மருந்துகளால் வளர்ச்சியை தடுக்க இயலாது. அம்மாதிரி செய்வதும் இயற்கைக்கு விரோதமாகும். இதற்கு ஒரே வழிதான் உண்டு. அடிக்கடி முக க்ஷவரம் செய்வதை கைவிட வேண்டும். முதலில் ஆண்டுக்கு ஒரு முறை முகத்தின் ரோமத்தை நீக்கவேண்டும். ரோமம் மிருதுவாகவும் மெதுவாகவும் வளரும். முகமும் கரடு முரடு மாறும். பிறகு ஆறு மாதத்திற்கு ஒரு முறை, இப்படி படிப்படியாக குறைத்து கடைசியாக வாரம் ஒரு முறை ஞாயிற்றுக்கிழமை மட்டும் செய்து வரவும். இது முதலில் சங்கடமாகவும், முகம் விகாரமாக இருப்பது போன்ற எண்ணமும அடிக்கடி தோன்றும் பிறகு தாடி வளர்ந்து விட்டாலே ஒரு தனி அழகு தான் போங்கள். இப்போது தாடி வளர்ப்பது ஒரு கலையாகி வருகிறது. இதனால் பணமும் மிச்சம், நேரமும் மிச்சம். முகமும் கத்தி படாமல் அழகாக திகழும். ஆனால் சிகை நீக்கும்போது உமக்கு இஷ்டமான கோவிலுக்குச் சென்று சிகை எடுக்க மறந்துவிடாதே. முயற்சி செய்துப் பார்!

கே - கோழிகளுக்கு வரும் கொள்ளை நோய் வெட்னரி டாக்டர்கள் (கோழிப்பண்ணை டாக்டர்கள்) வந்து ஊசி போட்டும் ஆங்கில மருந்துகள் கொடுக்கிறார்கள் 100, கோழிக்கு ஊசி போட்டால் 10, கோழிகள் கூட பிழைப்பது அரிதாகிறது. எனவே கோழிப்பண்ணை வைத்து இருக்கும்

**நான் இந்த ஊசி மருந்துகளை வெறுக்கிறேன். நாட்டு முறையில் கை பக்குவமாக ஏதாவது இருப்பின் கொள்ளை நோயால் கோழிகள் பாதிக்கப் படாமல் இருக்க ஆலோசனை கூறுங்கள்.**

ப - கோழிகள்; அழுகல் குப்பைக்கூளங்களை கிளறி அதிலுள்ள புழு, பூச்சி, கிருமிகளைத்தின்று வாழும் பிராணி. இவைகளுக்கு கொள்ளை நோய் வரத்தான் செய்யும், இது இயற்கை. ஆனால் மனிதர்களுக்கு தோன்றி துன்பம் தரும் கிருமிகளையும், பூச்சிகளையும், தின்று தன்னைய கொள்ளை நோய்க்கு அர்ப்பணம் செய்து கொள்ளும். கோழிகளைக்கூட சிலர் உணவாக புசிக்கிறனர். என்னே கொடுமை! இவர்களுக்கு ஏன் கொள்ளை நோய் வராது? கோழிப்பண்ணை நமது நாட்டிற்கு ஒவ்வாத ஒன்று. மனிதர்களுக்கு எதிரியாக விளங்கும் புழு, பூச்சி, கிருமிகளை, பிடித்து தின்னும் கோழிகள் கிராம மக்களோடு தான் வாழ்ந்து, மனிதர் களுக்கு நேரத்தையும், காலத்தையும் காட்டி பல நன்மைகளை செய்கின்றன. கோழிக்கு ஆகாரம் போட்டு பண்ணையாக வளர்க்கப் படுவதால் அவைகளின் சுபாவத்தன்மையில் சில வகை கிருமிகள் உண்டாகி கொள்ளை நோயாக பரவி கோடைகாலத்தில் இந்த நோயால மடிந்து விடுகின்றன. கோழிகள் காளான் போன்று குறுகிய வாழ்க்கை உடையது. இவைகளின் வாழ்க்கை எந்த விஞ்ஞான சிகிச்சையாலும் நீடிக்கவைக்க இயலாது. ஆனாலும் கோழிகளை கொள்ளை நோயிலிருந்து காப்பாற்றலாம். அடிக்கடி பொடுதலை, என்ற கீரையினத்தையும், ஒரு தலைப்பூண்டு, இஞ்சி, கொத்தமல்லி, துளசி ஆகியவைகளைக் கொடுக்க கொள்ளை நோய் தடுக்கும் சக்தியுள்ளது. நோய் வந்த பின்பு, அசல் கற்பூரம், ஓமம், புதினா, கீரை, இவைகளை சமனிடையாக எடுத்து இடித்து மிளகளவு வாயிலிட்டு வரவும். நோய் நீக்கம் காணும்.

**கே - " பொன்னுங்கொட்டை என்பது என்ன? "**

ப- "பொன்னுவாரை என்ற செடியில் காய்ந்த காய்கள் அவரை போல இருக்கும். அதில் உள்ள விதைகள் தான் பொன்னுங்கொட்டை என்பது."

**கே - ஐயா, எனக்கு வயது 33. டைப் அடிக்கும் உத்தியோகம். 12 வருடமாக இத்தொழிலில் இருந்து வருகிறேன். ஆங்கில எழுத்துக்களை**

காகிதத்தில் கண்கள் பார்த்த மாத்திரத்தில் இரண்டு கைவிரல்களும் மிஷினில் உள்ள எழுத்துக்களை பாராமல் தானுக இயங்கி வேகமாக டைப் அடிக்க வேண்டும். மூன்று வருட காலமாகவே இடது கை விரல்கள் மட்டும் சரியாக வளைந்து டைப் அடிக்க முடிவதில்லை. 3 ஆண்டுகளுக்கு முன்பு தொந்தரவே இல்லை. முன்பு 60 வார்த்தை வேகத்தில் தானுக இயங்கிய விரல்கள் இப்பொழுது 20 வார்த்தை வேகத்தில் கூட அடிக்க முடிவதில்லை. இடது கை விரல்கள் டைப் அடிக்கும்போது பின்னிக் கொள்கின்றன. விரைத்துக் கொள்கின்றன, சரியாக வளைந்து அடிக்க முடிவதில்லை. வலுக்கட்டாயமாக அடிக்க நினைத்து மிஷினில் உள்ள எழுத்துக்களை பார்த்து அடிக்க முயற்சித்தாலும், விரல்களில் வலி ஏற்படு கிறது. விரல்களில் நடுக்கம் ஏற்படுகிறது. டைப் அடிக்காமல் இருக்கும் போது கொஞ்சமும் வலி கிடையாது. நடுக்கம் இல்லை. ஆனுல் வலது கை விரல்களில் எவ்வித கோளாறும் இல்லை. அவை எப்பொழுதும்போல் வேகமாக இயங்குகின்றன. வலி இல்லை, நடுக்கம் இல்லை, விரல்கள் பின்னிக் கொள்வதில்லை. கை எழுத்துக்களும் நன்ருக உள்ளன.

நம் ''மூலிகை மணி'' ஒவ்வொரு மாதமும் எப்பொழுது வரும் என்ற ஆவலாதியிலேயே தபால்காரனை எதிர்ப்பார்ப்பேன். நம் மூலிகை மணி போன்ற சேவை செய்யும் உண்மையான உயிருள்ள பத்திரிகை எனக்கு தெரிந்தவரை வேறு ஏதுமில்லை என்பது என் கருத்து. அந்த ஆவலால்தான் நான் மூலிகை மணியின் ஓர் சந்தாதாராக இருந்து வருகிறேன் என்பதை பெருமையுடன் கூறிக் கொள்ளுகிறேன். மூலிகை மணியின் சேவை என்றென்றைக்கும் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். ஆகவே '' மூலிகை மணி '' நிதி நன்கொடைக்கு'' என்னுலான சிறு தொகையை இத்துடன் மணியார்டர் செய்துள்ளேன். பங்குனி இதழில் வெளியான ''வெறித்தனமான போதைக்காட்சிகள்'' ''தண்டனை யாருக்கு'' கருத்துள்ள கட்டுரைகள் பாராட்ட தக்கது. எனக்கு காபி, புகை கெட்டபழக்கம் இல்லை சினிமா ஏறிட்டும் பார்ப்பதில்லை. ஆங்கில மருந்து என் எதிரி, சைவஉணவு குடும்ப கவலைகளுண்டு, எனக்கு 4 குழந்தைகள் உள்ளன. என் நோய்க்கு தகுந்த பரிகாரம் எழுதும் படி பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ப - ஐயா, ''தாங்கள் அன்புடன் அனுப்பிய சிறு தொகையை நன்கொடையாக மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டோம். இதை விட இன்னெரு மகிழ்ச்சியான வார்த்தை எழுதினீர், '' **ஆங்கில மருந்து என் எதிரி, சினிமாவை ஏறிட்டுப் பார்ப்பதும் இல்லை** '' ஆஹா! என்ன ஆனந்தமான வார்த்தைகள்! என் உள்ளமே பூரித்துப்போனது! இப்படி

ஒவ்வொரு தமிழ் மகனும் திடமான மனது வைத்தால் அடுத்த பதினைந்து ஆண்டுகளில் தமிழர்களின் உடலையும், ஆரோக்கியத்தையும் கம்பீரத்தையும் கண்டு பிற நாட்டவர் பொருமை கொள்வார் என்பதில் ஐயமே இல்லை. இம்மாதிரி நல்ல பழக்கமுடைய உம் போன்றவர்களுக்கு சிகிச்சை செய்வது அடியேனைப் போன்றவர்களுடைய கடமையாகும். எனவே, உமது கை விரல் நரம்புக் கோளாறுகள் விலக இன்று தனியாக மருந்துகளும், முருகன் விபூதிப் பிரசாதமும் அனுப்பியுள்ளது. அதில் குறித்துள்ள முறைப்படி பத்திய உணவு கொண்டு மருந்துண்டு வரவும். விபூதியை நெற்றியில் முருகா! என நினைத்து அணிந்து வரவும். சண்முகநாதனருளால் நோய் முற்றிலும் நீங்கப் பிரார்த்திக்கிறேன்.

**கே - அண்ணாவுக்கு ஒரு அன்புச்சகோதரி எழுதியது, எனது 19-வயது பையனுக்கு டைபாயிட் ஜுரங்கண்டு ஆங்கிலமருந்தில் குணமானது ஆனால் அதன் பிறகு பேதி நிற்கவில்லை. ஜுரம் வந்து 3-மாதம் கழித்தும் கூட லகுவான ஆகாரம் கஞ்சியினம் சாப்பிட்டால்கூட பேதியாகிவிடுகிறது இதற்கு இங்கிலிஷ் மருந்துகள் கொடுத்துப் பயனில்லை. எனவே; தாங்களை அணுக வேண்டுமென்று தோன்றியது. இதற்கு தக்கபரிகாரம் சொல்லி என் மகனை தீராத பேதியிலிருந்து காப்பாற்ற வேண்டுகிறேன். இதே கவலை ஆகிவிட்டது.**

ப - அன்பு சகோதரி! டைபாயிட், அம்மை, காலரா போன்ற தீவிர நோய்களுக்கு பின்பு உடல் மிகவும் பலஹீனப்பட்டு போவதுண்டு. ஆங்கில மருந்துகளின் (பின் விளைவு) வேகத்தாலும் உமது மகனின் குடல்கள் பாதிக்கப்பட்டு இருக்கலாம். எனவே பேதியை நிறுத்த உடனடியாக ஆங்கிலமருந்துகளை நிறுத்தி 2-நாள் சென்றபின்பு காலையில் வெறும் வயிற்றில் ½ பலம் பச்சை அருகம்புல், 6 மிளகு சேர்த்து மை போல் அரைத்து ஒரு முடக்கு பசும்பாலில் கலந்து நான்கு நாளைக்கு கொடுத்து, இரவு படுக்கையின்போது ஒரு சிறிய மஞ்சள்நிற வாழைப்பழம் கொடுத்து வர பேதி நின்று போகும். கவலையும் நீங்கும்.

**கே - கேழ்வரகுக்கு "பஞ்சந்தாங்கி" என்று பதில் சொல்லிய தாங்கள், பஞ்சதிரி என்கிறீர்களே அதற்குப் பொருள் என்ன?**

ப - வியாபார வழக்குச் சொல், பண்டங்களை நூற்றுக் கணக்காக எண்ணிக்கையில் மொத்தமாக விற்பனை செய்யும்போது

நூற்றுக்கு இத்தனை, பஞ்சதிரி என்பது அதிகமாக போடுவார்கள். இதற்கு தான் பஞ்சதிரி என்பது.

கே - அன்புள்ள கண்ணப்பருக்கு,

நான் ஒரு திரைப்பட நடிகன் என்பதை தாங்கள் என் பெயரைக் கண்டே தெரிந்துகொள்வீர்கள் என்றே நம்புகிறேன். மூலிகை மணிக்காக நான் எனது வருவாயில் இருந்து நன் கொடையாக ரூ. 101-00 அனுப்பி உள்ளேன். ஆனால் தாங்களோ திரைப்படத்துறையை தாக்கியும், ஆங்கில மருந்துகளை அவமதித்தும் எழுதிவருவது எனக்கும், என் போன்றோர்களுக்கும் மிக வருத்தத்தைக் கொடுக்கிறது. என்றாலும் மூலிகை மணியின் மேல் அளவு கடந்த அன்பு கொண்டவன். வீணாக சினிமாவையும், நவீன மருத்துவத் துறையையும் பகைத்துக்கொண்டால் உமக்கு வருவாய் கிடைக்காமல் போகும், பிறகு மூலிகைமணி நடத்த இயலாது போகும். சிந்தனை செய்து நல்ல முடிவுக்கு வர வேண்டுகிறேன்.

ப - அன்புள்ள "மூலிகை மணி" அபிமானியே! தாங்கள் அனுப்பிய பணம் வந்தது. நான் ஒரு நடிகன் என்று சொல்லிகொண்டு உங்கள் வருமானத்திலிருந்து நன்கொடையாக ஏற்றுக்கொள்ளச்சொல்லி வேண்டி இருக்கிறீர் இப்படிச்சொல்வதை விட "தமிழ் மக்களின் வேதனை கண்ணீர் மூலமாக சம்பாதித்த பணம்" என்று சொல்லியிருக்கலாம். என்று எனக்கு தோன்றுகிறது. இந்த மாதிரியான பணத்தை நன்கொடையாக மூலிகை மணி ஏற்காது. வருத்தம் வேண்டாம். பணத்தைத் திருப்பி அனுப்பியிருக்கிறோம், பெற்றுக்கொள்ளுங்கள். சினிமாவையும் நவீன மருந்துகளையும் அவமதிப்பது அடியேனின் சொந்த வாழ்க்கைப் பிரச்னை அல்ல என்பதை உமக்கு தெரிவிக்க விருப்புகிறேன் அத்துடன் இந்த **மூலிகை மணி,** சினிமா, நவீன மருந்துகள் ஆகியவை களின் தீயச்செய்கைகளை மக்கள் ஆதரவு கொண்டு முறியடித்து தோல்வியுறச் செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு பிறந்துள்ளது என்பதை தெரிவிக்கிறோம். இந்த குறிக்கோள் நடவாது போனால் மூலிகை மணி மடியட்டும். இதில் சிந்தனை நல்ல முடிவு என்ற வார்த்தைகள், "**சினிமாவுக்கும் நவீன மருந்துக்கும் வால் பிடி**" என்று பகிரங்கமாக சொல்லாமல் காட்டியிருக்கிறீர் அல்லவா? போகட்டும். உங்கள் மூலிகை மணியின் அன்பும், மாற்றாந்தாய் காட்டும் அன்பு போலத்தான் இருக்கும்.

கே - என் பெயர் நம்மாழ்வார் வயது 17. நான் வாரத்திற்கு இரண்டு தடவையாவது சுய இன்பம் காண்கிறேன். வாரத்துக்கு 1 முறை தான் சினிமா பார்க்கிறேன். சுய இன்பம் கழிந்ததும் என் உடலில் உள்ள ஏதோ ஒன்று இழந்தது போல் உணர்வு தெரிகிறது. இப்பொழுது ஒரு நாளைக்கு 10 தடவை சிறுநீர் கழிக்கிறேன். அதிக பசியும் எதிலும் தெம்பு இல்லாமல் இருக்கிறேன். இன்னும்.........இது என்ன? பின்னால் ஏதாவது ஏற்படுமா? ஒரு ஆங்கில டாக்டரிடம் காட்டினால் அவர் பரிசோதித்து மைனர் டயாபிடிஸ் என்று ஊசி போட்டுக் கொள்ளச் சொன்னார். இக் கேள்வியை பதிலுடன் வெளியிடுங்கள். அனேக வணக்கம். நம்மாழ்வார்.

ப - நம்மாள்வார்! உமது பெற்றோரையும், இனி வருங்கால உனது மனைவியையும் எப்படி ஆளப்போகிறாய்? வேதனையாகவுள்ளது உமது கடிதங் கண்டு. சினிமாவும் சுய இன்பமும் ஜாங்கிரி - அல்வா போல ஆகிவிட்டது உம் போன்ற இளைஞர்களுக்கு. உனக்கு டயாபடீசும் இல்லை, ஒரு குட்டிச்சுவர் நோயும் இல்லை. சினிமாவை மறந்து தினமும் காலையில் குளித்து விபூதி அணிந்து "**கந்தர் சஷ்டிக் கவசம்**" ஒருமுறை படித்துவிட்டு பள்ளிப் பாடங்களை சரிவர கவனித்து வருவாய் அதனால் சுய இன்ப நினைவு மறந்து போகும். நீ உன்னையே ஆளக்கூடியவன் என்ற தகுதி பெறுவாய். அது தானே உன் பெயர் நம்மாள்வார்? உனக்கு பழநி அபிஷேக விபூதி அனுப்பி உள்ளேன். இதை நாள் தோறும் அணிந்து நல்வழி பெறக்கடவாய். முருகன் அருள் கிடைக்கட்டும்.

கே - மூலிகை மணி சித்தர் ஏ. ஆர். கண்ணப்பர் அவர்கலுக்கு ......... எமுதிய நிருபம் - நிற்க... நான் - 15 - வருஷசகாலமாய் - நான் நினைத்த - காரியங்கள், ஒரு ரூபாயில் - 15 - அனா வெற்றி - ஆவுரது - ஆனால் - ஒரு அணாவில் - குரை - தோசம் ஆவுரது-அது என் முன்னேற்றத்தை தடுத்துக் கோண்டு - வரது 1-வது நிலம் - பேசி - முடிவடையர நேரத்தில் வேர - ஆல் - தடங்கல் செய்யிது - வாங்க - முடியரதில்லை 2-வது வீடு கட்ட முடியரதில்லை, 3-வது சினிமா கதை முக்காவாசி-எளுதி பூர்த்த - செய்ய முடியரதில்லை. 4-வது பம்பாயில் 1-முதல் 10-வரை நம்பர் ஆட்டம் இருக்குது, அதுலெ 1-நம்பர் வித்தியாசம் ஆவுரது. அது விபரம் - ஒரு ரூபாய் ஆடுனல் - நாம் ஆடின நம்பர் வந்தால் 9 - ரூபாய் கெடைக்கும் - சனி - ஞாயிறு இரண்டு நால் இல்லை - மயிற்ற - நால் எல்லாம் - ஆடுனல் வேண்டிய ரூபா சம்பாதிக்கலாம் - நான் 7-ஆடுனல் 8-வருது 8-ஆடுனல் - 7-வருது. நான் நினைத்த - நெம்பர் - ஆடாமல்

இருந்தால் அது வுடனே வருது - அதுனுல் ஏதோ கெட்ட கிரகம் இருந்து தட்டி விடுது - இதற்கு தாங்கள் மூலிகை கவசம் ஒன்று - அனிப்பினு வாங்கி கொண்டு - ரூபாய் அனிப்பிவிடுகிறேன் என்று அன்போடு கோட்டு கொல்லுகிறேன். பம்பாய்.

ப - ஐயா, உமது கடிதங்கண்டு வருந்துவதா, சிரிப்பதா ஒன்றுமே தெரியவில்லே. மனிதன் நினைத்த காரியங்கள் ரூபாயில் இரண்டணுவுக்கு வெற்றியடைவதே கஷ்டம். அப்படி இருக்கிறது தற்காலம். ஒருவேளை நபாபைசாவை அணுவென்று தவருக எழுதினுயோ? இலக்கணப் பிழையின்றி கடிதம் எமக்கு எழுதிய உமது திறமை எந்த சினிமாக்காரன் காதில் போட்டுக் கொள்ளப் போகிருன்? நீங்கள் என்ன தொழில் செய்து சம்பாதிக்கிறீர்கள் என்பதை எழுத மறந்துவிட்டீர்! நெம்பர் ஆட்டம் வேறு உங்களே சதி செய்கிறது பாவம்! பூர்வ ஜென்மத்தில் என்ன வினே செய்தீரோ! அதுகள் எல்லாம் சினிமாக் கதையாகவும் நெம்பர் ஆட்டமாகவும், வீடு - நிலமாகவும் உங்கள் முன்னேற்றத்தை வந்து தடுக்கிறது. இதற்கு மூலிகை கவசம் ஒன்றும் பலன் தருது. எனவே நிறைவேருத ஆசை, மேல்படி காரியங்களில் பிரவேசித்து பணத்தை வீண் விரயம் செய்து "**கொல்ல வேண்டாம்**".

## ஈஸ்வரன் புன்னகை புரிகின்ருன்!

இரண்டு வேளைகளில் ஈஸ்வரன் புன்னகை புரிகின்ருன். முதலாவது, ஒருவன் கொடும் நோயால் வருந்திச் சாகும் தருவாயில் இருக்கும்போது, வைத்தியன் உள்ளே வந்து நோயாளியின் தாயைப் பார்த்து, "பயப்பட வேண்டாம்; உன் மகனுடைய உயிரைக் காப்பாற்ற நான் இருக்கிறேன்" என்று சொல்லும்போது! இரண்டாவது, இரண்டு சகோதரர்கள் தங்களுடைய நிலத்தைப் பங்கிட்டுக்கொள்ள அளவுகோலே கையில் எடுத்துக் கொண்டு கோடு கிழித்து, "அந்த பக்கம் உன்னுடையது, இந்த பக்கம் என்னுடையது" என்று சொல்லும்போது! ★

— ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர்.

கே - தகை சான்றீர்! வணக்கம். என் நீள் மடலினை ஆய்ந்து உடன் கருத்தறிவித்தமைக் குறித்து மிக்க மகிழ்ச்சி கொள்வதுடன் என் நன்றியையும் தெரிவிக்கிறேன். நோய் குறித்து தக்க ஆலோசனை பெற நேரில் வருதலே சிறப்பு என்ற கருத்தை உணர்கிறேன். விரைவில் நேரில் வந்து சந்திக்க முயற்சிக்கிறேன். தங்களுடன் கலந்து உரையாட எந்த நாள், நேரம் சிறப்புடையது என்பதை தயை கூர்ந்து அறிவிப்பின் அது போழ்து வருவதற்கு உறுதுணையாய் இருக்கும். நிற்க யான் மூலிகைமணி இதழைத் தொடர்ச்சியாகப் படித்து வருகிறேன். இவ்விதழ் மூலம் தமிழ் மருத்துவத்திற்கு புத்துயிர் ஊட்டுகிறீர்கள், தங்களின் பணிக்கு என் சிறு உதவியாக ரூ. 21-00 (இருபத்து ஒன்றுக்கு) பாங்க் ஆப் மதுரை திருச்சி செக் ஒன்றை இத்துடன் இணைத்தனுப்பியுளளேன். இதனை மூலிகைமணி வளர்ச்சி நிதியில் சேர்க்க வேண்டுகிறேன். குன்று தோறும் ஆடிடும் கோலக் குமரன் நல்லருள் புரிவாராகவும்.

புலவர் சி. த. சுப்பிரமணியன், 43, அல்லிமால் தெரு, திருச்சி-8.

ப - அன்புள்ள ஐயா, தங்கள் நன்கொடையை நன்றியுடன் ஏற்றுக்கொண்டோம். உங்கள் பாராட்டுக்கள் யாவும் இறைவனுக்கே அர்ப்பணம். நிற்க தாங்கள் நேரில் இங்கு வரலாம். செவ்வாய் அல்லது வியாழன் காலை 8½-மணிக்கெல்லாம் வந்தால் கைநாடி பார்க்கவும் நோய் நிதானிக்கவும் வசதியாக இருக்கும். உங்களுக்காக எமது நேரத்தை ½ மணி வரையில் ஒதுக்கலாம். நீண்ட நேரத்தை அபகரிக்க எண்ணுதீர். உறங்கவும் ஒய்வு கிடைக்கவில்லை. மூலிகை மணி காலம் தவறுமல் அன்பர்கள் கையில கிடைக்கவேண்டும். எத்தேதியில் வேண்டுமானலும் வரலாம்.

கே - 'நான் நேரில் அங்கு வந்து சந்தித்தபோது என்னைப் பரிசோதித்து, சிகிச்சை தர தங்களுக்கு விருப்பம் இல்லை என்றும், உணவில் வேண்டியதை உட்கொள்ள சில முறைகள் குறித்து தருவதாக கூறி குறித்தும் தந்தீர்கள். இங்கிலீஷ் மருந்துகளை சிறுவயது முதலே நிறைய (ஊசி; மருந்து, மாத்திரை) உட்கொண்டு இருப்பதால் அதையே நாடுமாறும் எனக்கு கூறினீர்கள். ஏன் எனக்கு நாட்டு வைத்தியம் கூடாதா? தாங்கள் மருந்து தர மாட்டீர்களா? என்பதைத் தெரிவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ப - நாட்டு வைத்தியம் எப்போது? "கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்து என்ன பயன்? உன் உடம்பின் மயிர்க்கால் களில் எல்லாம் இங்கிலீஷ் மருந்துகள் ஊறி கலந்து விட்டதே! நாட்டு

மருந்துகளுக்கு உன் உடம்பில் வேலையில்லை. அதனால் தான் மருந்து வேண்டாமென்று கூறினோம். வேறு நாட்டு வைத்தியரிடம் கூட நாட்டு மருந்தை சாப்பிட வேண்டாம். வீணாக பழி நாட்டு வைத்தியருக்குத்தான் வந்து சேரும். முயற்சி செய்யாதீர்.

கே - ஐயா, பிரசவத்தின் போது எனக்கு வயிறு கொஞ்சம் பெரியதாகிவிட்டது (குழந்தைக்கு 1½ வயதாகிறது, அதற்கு அடிக்கடி சளி பிடிக்கிறது). என்னைப் பார்த்தால் தற்போது 4-மாத கர்ப்பிணி போல் தோற்றமளிக்கிறது. வயிறு சுருங்க மார்க்கமிருந்தால் கூறவும். நீங்கள் பவானி வந்ததாக மூலிகை மணியில் பார்த்தேன். மிகுந்த துயரமடைந்தேன். நோய் தீர்க்கும் சித்தர் தாங்கள் வந்த விஷயம் தெரிந்து இருப்பின் எப்படியாவது வீட்டில் அநுமதி கோரி கண்டு இருப்பேன். வெகு தொலைவில் உள்ள தாங்களைக் காணவே முடியாதோ என்ற ஏக்கம் வேறு. தவிர இடது பக்கம் நெஞ்சில் ஒரு வலி. வலிக்கும் போதெல்லாம் பயம்; தெய்வம் போன்ற தங்களைத்தான் நினைப்பேன். 'நம் நாட்டு மூலிகைகள்' முதல் பாகத்தில் 'செம்பரத்தைக் கட்டுரை' யில் உள்ளபடி செய்யலாமா? எனக்கு உஷ்ணம், தலைவலி இவைகள் உண்டு. இதனால் அதிகமாகி விடுமா? என்ற ஐயம். அதனால் சாப்பிட வில்லை. இதற்கெல்லாம் தங்கள் இடமிருந்து ஒரு ஆறுதல் கடிதம் வந்தால் எல்லாவித தொந்தரவுகளும் பறந்துவிடும் என்ற நம்பிக்கை என் மனதில் இருந்து கொண்டேயிருக்கிறது ஐயா. தாங்கள் எப்போதாவது வேறு ஏதாவது காரியமாக வந்தாலும் எங்கள் விலாசத்துக்கு அன்பு கூர்ந்து வந்து போங்கள். நான் கேட்டிருக்கும் கேள்விகளை 'நோயும் மருந்தும்' பகுதியில் வெளியிட்டால் தயவு செய்து பெயர் ஊர் வெளியிட வேண்டாமென கேட்டுக் கொள்ளுகிறேன்.

ப - அன்புள்ள சகோதரி! உமது நீண்ட கடிதம் கண்டு பரிதாபம் கொண்டோம். தமிழகத்தில் பிரசவித்த தாய்மார்களை சரிவர கவனிப்பதில்லை. சில இடங்களில் உதவிக்கு ஆள் இல்லாத காரணத்தால் ஓய்வு பெறாமல் உடனே எழுந்து நடமாடுவது, பளுவான வேலைகளுக்கும் இலக்காகி, அதனால் அடிவயிறு கனம் மற்றும் பலவித கோளாறுகள் உண்டாகி விடுகின்றன. இன்னும் சில வீடுகளில் மாமியார் பயத்தால் பிரசவித்த தாய்மார் உடலுக்கு ஓய்வு தராமல் இப்படியான ஓர் நிலையை உண்டாக்கிக் கொள்வார்கள். உங்களுக்கு எந்த விதத்தில் இப்படியானதோ? நெஞ்சின் இடது பக்கம் வேறு வலிக்கிறதாக கூறியுள்ளது. செம்பரத்தைப் பூ கஷாயத்தில் பால், சர்க்கரை போட்டு காபி

போல தினம் ஒருவேளை தைரியமாகச் சாப்பிடு. இதனால் இருதயவலியும் உஷ்ணமும் குறையும். வயிறு கனம் குறைய பழம் புளியுடன் மஞ்சள் நிற கரிசலாங்கண்ணியை பருப்பு போட்டு பகல் உணவில் தினசரி 25-நாளைக்குச் சாப்பிட்டு வருவாய். சிறுகச் சிறுக வயிறு உபபுசம கரையும்; கருப்பாசயம இறுகும். மேலும் வாரம் ஒரு முறை சிறுகீரை, அகத்திக்கீரை, வாதநாராயணஎ, லஞ்சமுண்டக்கீரை, ஆகியவைகளைச் சேர்த்து சாபபிடு. இரவு படுக்கையில முழங்காலகளுககு கீழே ஒரு தலையணையை வைத்துப் படுக்க அடிவயிறு உபுசம் கரையும். வாழைத் தண்டு, அத்திப்பிஞ்சு, பிரண்டை தொகையல், பாகல் இவைகளை அடிக்கடி சாப்பிடலாம். குழந்தைக்கு வேறு அடிக்கடி சளி பிடிப்பதை தடுகக நீங்கள் குளிர்ச்சியான பண்டங்களையு, புளித்த மோர், தக்காளி போன்ற சீதள வஸ்துக்களை விலக்கவும். உத்தாமணிக் கட்டுரையில் குழந்தைக்கிப் பொதுவாக மருந்து செய்முறை கூறியுள்ளதை கவனித்து செய்துவைக்கவும். எல்லாம் வல்ல திருவருள் துணை செய்க. உங்கள் துயரம், நோய் யாவும் சூரியனைக்கண்ட பனிபோல் விலக பிரார்த்திக்கிறேன். அன்பான நம்பிக்கையே உமக்கு நல் வழித்துணையாகும். கவலை விடுங்கள். வேறு காரியமாக வெளியூர் செல்லும்போது நோய்க்கு ஆலோசனை கேட்பதும் நோயாளிகளைக் காணபதும் முடியாத காரியம்.

**கே - மூலிகைக்கு சாபநிவர்த்தி செய்து உயிர் கொடுத்து "மந்திர உச்சாடனம்" செய்து எடுத்தால் பல அற்புத வேலைகள் செய்யலாம் என்று அடிக்கடி எழுதி வருகிறீர்கள். இதை எப்படி செல்வது? என்பதை விளக்கி சொல்ல வேண்டுகிறேன்.**

ப - "மந்திர உச்சாடனம்" செய்வதென்பது கண் கொண்டு ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானமல்ல. மந்திர உச்சாடனங்கள் மெய்ஞ் ஞான சாதனையின் அடிப்படை. இதை ஒரு குருமுகாந்திரமாக இருநது பலகாலும் அவருக்குப் பணிவிடை செய்து மககள் உபகாரத்திற்கு என கற்கவேண்டிய முறையாகும். இது எலலோராலும கையாளுவது அரிது. மூலிகைகளில் இப்படியெல்லாம் சாதனை செய்து நம் முனனோர் வழி வந்தவர்கள் மககள் நலனுக்காக பாடுபட்டு வநதுள்ளனர். இன்றும் ஒரு சிலர் கையாண்டு வருகின்றனர் என்பதை மேற்கோளாக குறிப்பிட்டு உள்ளோம் என்பதை நீங்கள் உணரவேண்டும்.

# கொஞ்சம் கற்பனை செய்யுங்கள்!

> "உங்கள் தாய், மனைவி, அக்காள், தங்கை, மகள், இவர்கள் சினிமாப் படங்களில் வரும் வேறு ஆடவர்களுடன் சேர்ந்து நடிப்பது போலவும், நீங்கள் அதை மனச் சந்தோஷத்துடன் பார்த்து ரசிப்பது போலவும்"

இந்த கற்பனை உங்களுக்கு இனிமையாக இருந்தால் நீங்கள் உடனடியாக அந்நிய நாட்டிற்குச் செல்லும் பாஸ்போர்ட் பெற்று பிரான்சுக்கோ, அமெரிக்காவுக்கோ சென்றுவிடுங்கள். இந்த கற்பனை உங்களுக்குத் துயரத்தைத் தந்தால், நீங்கள் வணங்கும் தெய்வத்தினிடம் மண்டியிட்டுக் கேளுங்கள்.

"நான் எனது மனைவி, மகள் சினிமாவில் நடிக்க விரும்பாதது போலவே, நல்ல உள்ளம் படைத்த எந்த ஆண்மகனும் விரும்பமாட்டான். என் மனம் துயரப்படுவது போலவே; அவர்களும் துயரப்படுவார்கள் **ஆதலால் இனி நான் சினிமா பார்க்கமாட்டேன்** என்ற வைராக்கியத்தை ஆண்டவனிடம் கேளுங்கள்.

அடுத்து உங்கள் குழந்தைகள், மற்றவர்கள் சினிமாப் பார்க்க விரும்பின் அவர்களுக்கு திருவள்ளுவர், ஔவை, நாயன்மார், ஆழ்வார் வீரப் புகழ் பெற்ற நம் தமிழ் அரசர்கள், இன்னும் எவ்வளவோ பெரியார் களின் சரித்திரங்களைச் சொல்லி வீரம் செறிந்த மக்கள் ஆக வழிசெய்யுங் கள் அல்லது அவைகளைப் படித்து இன்பம் பெறும் வழியை கற்பியுங்கள்.

**சினிமாவுக்குப் போவதில் உள்ள தீமைகளை விளக்குங்கள் :-**

(1) **கண்கள் பார்ப்பதை கை செய்யும்.**

(2) **காது கேட்பதை திருப்பிச் சொல்லும்.**

(3) **பொய்க் கற்பனையை அறியும் மனம், அதுவும் பொய் கற்பனையே செய்யும்.**

★ **சிந்தியுங்கள்!**

உ

முருகா.

# "பண்ட மாற்று - செய்த இருவர்"

திருமுருக கிருபானந்தவாரியார்

தமிழ்ப் புலவர்கட்கு அளவில்லாத சிறப்புண்டு. அவர்கள் அருப் பெரும் குணங்களை யுடையவர்களாக வாழ்ந்தார்கள்; கவியரசரைப் புவியரசரும் போற்றி செய்தார்கள். புலவர்களால் பாடப்பெறுவதைத் தமது பெறலரும் பேருக மக்கள் கருதினர்கள். தக்க புலவர்களால் பாடப்பெற்றவர்கள் அழியாத புகழுடமையைப் பெற்று வாழ்வார்கள். இமயம் உள்ளவரை அவர்களுடைய பெருமை குன்ருது.

## மதுரை நகர்

மதுரை மாநகரம் தமிழ் நாட்டின் தலைநகரம்; சங்கம் இருந்த தண்டமிழ்ப்பதி; அங்கையற்கண்ணம்மை அவதரித்த அரிய திருத்தலம். அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் புரிந்து அரனர் அமர்ந்து அருள் புரிந்த புண்ணியபுரி. அத்தலத்திலேயுள்ள சிவபெருமானுடைய திருநாமம் சொக்கலிங்கம்.

## அரச வைத்தியர்

இத்தகைய திருத்தலத்திலே ஒரு சிறந்த மருத்துவர் வாழ்ந்தார். அவர் கைராசியுடையவர். அரச வைத்தியர்; உயர்ந்த மருந்துகளைத் தயாரித்து வியாதிகளை நுணுக்கமாக ஆய்ந்துத் தீர்ப்பதில் வல்லவர்.

**"நோய்நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்"**

என்று திருவள்ளுவர் கூறியபடி நோயையும், நோய்வந்த காரணத்தையும் அதனை நீக்கும் தன்மையையும் நன்கு நுணுகியுணர்ந்து மருந்தைத் தருவார்.

## நற்குண சீலர்

அவரிடத்திலே எளிய வர்கள் ஏழைகள் சென்று அணுகமுடியாது. மன்னர்க்கும், மன்னரையொத்த செல்வர்க்குமே அவர் வைத்தியம் புரிவார். மிகப் பெருத்த செல்வநக்குப் படைத்தவர். அவர் பெயர் சொககலிங்கப் பண்டிதர். இவர் நற்குண சீலர். தூய உள்ளம் உடையவர். ஏற்றமும் தோற்றமும் படைத்தவர். பாணடிய மன்னருடன் பழகிச் சிறந்த ஆடை அணிகளுடன் விளங்கினுர்; இவருடைய தந்தை வீரபத்திரர்.

## புலவர் மருதனுர்

இவர் காலத்தில் மதுரையில் ஒரு பெரும் புலவர் இருந்தார். அவர் பெயர் மருதனுர். இவர் சிறந்த பண்பாடும் தமிழ்ப் புலமையும் உடையவர். அரசர்களால் மதிக்கப் பெற்றவர். இவருடைய புகழ் எண் திசைகளிலும் பரவியிருந்தது. அக்காலத்தில் அவருடைய திருவாக்கினுல் பாடல் பெறுவதைத் தமது பெரும் பேராகத் தக்கார் கருதினுர்கள். சொக்கலிங்கம் என்ற மருத்துவர், மருதனுரிடம் ஒரு பாடல் பெறவேண்டும் என்று நெடுநாட்களாக அவாவினுர். அதற்கு என்ன வழி என்று யோசித்தார்.

## நோயால் வாடிய மருதனுர்

மருதனுர் ஒரு சமயம் கொடிய நோயினுல் பீடிக்கப்பட்டார். மெலிந்து விட்டார். எத்தனையோ மருத்துவர்கள் பார்த்தும் பலப்பல மருந்துகள் தந்தும் நோய் தீரவில்லை. எல்லோரும் கைநழுவவிட்டார்கள். பிழைக்கமாட்டார் என்று கருதினுர்கள். அந்தோ! இவர் மறைந்தால் தமிழுலகுக்கே பெரிய நஷ்டம். தமிழறிவின் கருவூலமாகிய இவர் வாழ்ந்தால உலகில் தமிழும, தமிழப் பண்பாடும் வாழும் என்று கூறி மக்கள இரங்கினுர்கள். தமிழ்ப்பெரும் புலவர் நிலை குறித்து வருந்தினுர்கள்.

## ஏங்கிய புலவர்

மருதனுர், மாபெரும் சிறப்புடைய மருத்துவர் சொக்கலிங்க பண்டிதரிடம் தனது உடம்பைக் காட்டி மருந்து உண்டால் ஒருவேளை

நலமாகக்கூடும் என்று எண்ணினர். ஆனால் அவரோ அரசவைத்தியர். எளியனாகிய எனக்கு அவர் மருத்துவம் புரியமாட்டாரே; இதற்கு என்ன செய்வோம்? அவர் பெரும் பொருள் கேட்பாரே, என்னிடம் ஒரு சல்லியும் கிடையாதே. சொக்கேசர்தான் இதற்குத் துணைபுரியவேண்டும் என்று எண்ணினர்.

மருதனருடைய நலத்தில் கருத்துடைய ஒரு நண்பர் சொக்கலிங்கப் பண்டிதரிடஞ் சென்றார். "ஐயா! வணக்கம்; நமது துறையமபதியில் பெரும்புலவராகிய மருதனர் என்பவர் பிணி வாய்ப்பட்டு பெரும் துயரம் உறுகின்றார். அவர் வாழ்ந்தால் தமிழ் வாழும். அவருக்குச் செய்யும் உதவி தமிழ்த் தாய்க்குச் செய்தது. தாங்கள் தயவு செய்து அவரைப்பார்த்து மருத்துவம் புரியுமாறு வேண்டுகின்றேன் என்றார். புலவரிடம் பாடல் பெற வேண்டுமென்று நெடுங்காலமாகக் கருதியிருந்த மருத்துவர், உடனே மருந்துப் பெட்டியை எடுத்துக் கொண்டு வலிய மருதனர் இருக்குமிடம் போனர். நோயில் கிடந்து துள்ளித்துடித்துக் கொண்டு பாயில் கிடந்தார் மருதனர்.

## புலவரின் வியப்பு

அவருக்குத் தன் கண்களை நம்ப முடியவில்லை. அரசருடைய அரண்மனைக்குச் செல்லும் அருமை பெருமை நிறைந்த சொக்கலிங்கரா நம்முடைய வீட்டுக்கு வந்தார்? நான் அழைக்கவும் இல்லையே? ஏதோ தெய்வ கருணை போலும் எனக் கருதினர்! படுத்த வண்ணமே கரங்களைக் கூப்பிக் கும்பிட்டார். சொக்கலிங்கப் பண்டிதர் அவர் உடலைச் சோதித்தார், நாடிகளைப் பார்த்தார். நோயின் நுட்பத்தையுணர்ந்தார். சிறந்த மருந்துகளைத் தந்தார். படிப்படியே நோய் நீங்கியது. உடல் நலமுற்றது. முற்றிலும் நன்மையுற்றார். மருத்துவருக்குப் பணம் தர அவரால் இயலவில்லை. என் செய்வார்? உடனே தன்னைக் காத்தருளிய மருத்துவர் மீது ஒரு நேரிசை வெண்பா பாடினர். அதனை எழுதிய ஏட்டை வெற்றிலை, பாக்கு, பழம், கற்கண்டு நிறைந்த தட்டில் வைத்தார்; மருத்துவரிடம் தந்து தனது நன்றியறிவைத் தெரிவித்தார்.

# மருத்துவரின் மகிழ்ச்சி

அப்பாடல் இதன்கீழ் உள்ளது :

மிக்க மதுரைச் சிவனும் வீரபத்தி ரன்சுதனும்
சொக்கர் இருவரெனத் தோன்றினர்—அக்கோன்
பிறவாமால் காப்பான் பிறந்தவரை மீண்டும்
இறவாமல் காப்பான் இவன்.

இப்பாடலைப் பெற்ற மருத்துவருக்கு மட்டில்லாத மகிழ்ச்சியுண்டாயிற்று. பதினாயிரம் பவுன் தந்தாலும் அவருக்கு அத்தனை திருப்தி உண்டாயிராது. அப்பாடலை லட்சம் பவுனைக் காட்டிலும் பெரிதாக மதித்தார்.

மதுரையில் சொக்கலிங்கம் என்று இருவருண்டு. ஒருவர் சிவபெருமான்; மற்றொருவர் வீரபத்திரன் புதல்வராகிய மருத்துவர். 'முன்னவராகிய சொக்கலிங்கம், தன்னை யடுத்தவரைப் பிறவாமல் காத்தருளுவார்; பின்னவராகிய சொக்கலிங்கம், தன்னை யடுத்தவர்களை இறவாமல் காத்தருளுவார்' என்ற பொருளுடைய பாடலால் அம் மருத்துவரும் இறவாதவராயினர்.

(முற்றும்)


உ

ஸ்ரீ ராஜ பூஜித மகான்

## ஸ்ரீ குழந்தையானந்த சுவாமிகள் திவ்யசரிதம்.

ஸ்ரீ K. S. V. ரமணி அவர்கள் எழுதிய

புத்தகம் விலை : ரூபாய் 2-00

கிடைக்குமிடம் :- தபால் செலவு தனி.

ஸ்ரீ குழந்தையானந்த சுவாமிகள் சத்சங்கம்
357. பைகிராப்ட்ஸ் ரோட், சென்னை-14.

உ

முருகா.

# இலட்சியவாதி

மு. பெருமாள்

— (சென்ற மாதத் தொடர்ச்சி)

## மணவினை மர்மம்.

இலட்சியவாதியின் இரண்டாவது மகனுக்கு திருமணம் ஏற்பாடு ஆகின்றது. பெண் பார்க்கின்றார் பல இடங்களில், எளிதில் அமையவில்லை. நல்ல கல்வி, கேள்வி, பட்டம் பதவி, உண்மை, ஒழுக்கம், சைவம், சீலம், குலம், கோத்திரம், ஆக இவை நிறைந்த பெண்ணைத் தேடி ஓடி ஓடியலைந்தார். ஜாதகம் நகலும், சோதிடரும், வராத நாளே இல்லை. சென்னையில் சிறந்த பெண் இருப்பதாகச் செய்தி வந்தது, சென்றார் குடும்பத்தோடு. கண்டார் பெண்ணை, கட்டழகுதான். கண் பார்வை மங்கல். வேண்டாமெனத் திரும்பினார். மதுரையில் நல்ல பெண்ணிருப்பதாக மற்றொரு செய்தி வந்தது. மனமுவந்துச் சென்றார். பெண்ணும் பிடித்தது. அதன் பெற்றோரும் பிடித்திருந்தது. விருந்துபசாரம் வேண்டியளவு நடந்தது. சீர், செல்வம் எவ்வளவு என்னும் சொல் எழுந்தது. பெண் வீட்டார் எவ்வளவு நகை போடுவீர்கள் என்றனர்? பிள்ளையின் வீட்டார் நீங்கள் எவ்வளவு சீர், செல்வம் கொடுப்பீர்கள் எனத் திருப்பிக் கேட்டனர்? எங்கள் பெண்ணுக்கு நகை, சீர் செல்வம் கொடுப்பது எங்கள் விருப்பம் போன்று செய்வோம். நீங்கள் கேட்பது கூடாது என்றனர். நாங்களும் வீட்டுக்கு வரப்போகும் மருமகளுக்கு எங்கள் விருப்பம் போன்று செய்வோம். நீங்கள் கேட்பது நன்றன்று என்றனர். திட்டமாகத் தெரிவித்தால் தான் பெண் தருவோம் என்றனர். மட்டமான மனப்பான்மை இது என மனம்வெறுத்து மீண்டனர் ஊருக்கு.

காஞ்சியில் கட்டழகான பெண் இருப்பதாகக் கடிதம் வந்தது. சிந்தை மகிழ்ந்து சென்றனர். எல்லாம் ஒத்திருக்கவே இசைந்தனர். நல்ல சம்பந்தம் நேர்வதைக் கேட்ட உறவினரில் ஒருவர் இலை பழுப்பானு லும் குலப்பழுப்பு கூடாது. வேண்டாம் இந்த சம்பந்தம் என்றுர். அவர்களில் ஒரு பெரியவர் நாம் அனைவரும் ஒரே ஆண்டவனின் குழந்தைகளே! குல நலம் என்பது குருட்டு வாதமாகும். குண நலம் தான் வேண்டும். மனம் ஒத்தபோது மணம் முடிப்பதுதான் மதியுடைமை ஆகும் என்றுர். சுற்றத்தார் பழிப்பர் என்று சிந்தை குலையாதீர். சுற்றத்தார் என்பவர்களில் பலர் ஒழுக்க குறைவாக உள்ளனர். தங்கள் வாழ்க்கையில் உள்ள பழுப்பை அவர்கள் சிந்திக்காமல் திருமணத்தின்போது மட்டும் பிறர் குலப் பழுப்பை மிகைப் படுத்திப் பேச முற்படுகின்றனர். குலம் என்றுல் என்ன என்பதை அன்பு கூர்ந்து விளக்க வேண்டுகிறேன் என்றுர் இலட்சியவாதி.

பெண்ணின் தகப்பனுர், நமது பெரியவர்கள் வகுத்து வழிகாட்டியுள்ள முறைதான் என்றுர்.

குலம் என்பதின் அடிப்படை என்ன? எந்த ஆதாரத்தில் குலம் என வகுக்கப் பட்ட வழக்க முறையாகும்.

## ஆவாரைப் பஞ்சாங்கம் பொடி

பஞ்சாங்கம் என்பது வேர், பூ, காய், இலை, விதை என்ற ஐந்து அங்கம். ஆவாரைச் செடியின் ஐந்து அங்கத்தையும் சரி எடையாக எடுத்து உலர்த்தி தூள் செய்து வைத்துக்கொண்டு 1-விராகனிடை (3-கிராம்) எடுத்து காலை மாலை சாப்பிட்டு வர நீரிழிவு, சர்க்கரை வியாதிகளுக்கும் ஆண்குறி நீர்தாரை எரிச்சல் ஆகியவைகள் நீங்கி, தாகம் அடங்கும். ஆவாரைச் செடியைப் பற்றி முழு விபரம் 1962-ம் ஆண்டு தினமணிச் சுடரில் வெளியாகியுள்ளது. தற்போது ''நம் நாட்டு மூலிகைகள்'' முதல் பாகத்திலும் காணலாம்.

ஜாதியோ, மரபோ, மக்களிடையே எம்முறையில் வகுக்கப்படுகின்றது? இதற்கு ஆதாரம் என்ன?

தொடக்கத்தில் மக்கள் தொழில் முறையிலிருந்து ஜாதி முறை வகுக்கப் பட்டிருக்க வேண்டும்.

தொழில் முறையிலிருந்து ஜாதி முறை வகுக்கப் பட்டதாயின், ஒரு குடும்பத்தில் ஒருவர் விவசாயத் தொழிலும், ஒருவர் உத்தியோகமும் ஒருவர் மளிகை வியாபாரமும், ஒருவர் ஜவுளி உற்பத்தியும் செய்யும் தொழிலில் ஈடுபட்டு உள்ளனரே! தாங்கள் தெரிவித்த அடிப்படையில் இவர்கள் நால்வரும் நான்கு தொழிலால் நான்கு ஜாதியினராக இருக்க வேண்டுமல்லவா?

ஆம்! ஆயின் மக்களிடையே குல முறை எங்ஙனமோ நிலையாக வழக்கமாகி விட்டது. மாற்ற முடியவில்லை.

ஒரு குலத்துக்குள்ளாகவே பல உட்பிரிவு உள்ளதே? இதற்கென்ன அடிப்படை?

குலமும், செல்வச் சிறப்பும் ஒழுக்கக் குறைவும், ஏழ்மையுமே ஒரு குலத்துக்குள் இங்ஙனம் உட்பிரிவுக்கு அடிப்படையாகும்.

குல உட்பிரிவிற்குக் காரணங்கள் இவையாயின் குலம் பார்ப்பது என்ற முறையே முழுத் தவறாகும். தவறான முறைகளை வழி வழியாக வளர்த்து வரலாம்? நாம் அனைவ

## மாவிலங்க வேர்

மாவிலங்க வேரை அறைத்து பாலில் கொள்ள சுரம், வெட்டை, சூலை, சுரோணிதக் கட்டு, மந்த வாயு, குன்மம், அரையாப்பு, கண்டமாலை, புண், புரைகள், பிளவை, வீக்கம், வாதம், ஜன்னி, மூர்ச்சை, கல்லடைப்பு, விஷக் கடி தீரும். (புளி, புகை, போகம் கூடாது)

ரும் ஒரே இறைவன் குழந்தைகள் என்ற உண்மையை உணர்ந்து வாழ்வதும் பழகுவதும்தான் உத்தம மாகும். இனித் தாங்கள் பெண் கொடுப்பதானாலும் எங்களுக்கு வேண்டாம் என்று புறப்பட்டார் இலட்சியவாதி.

எல்லாப் பொருத்தமும் நிறைந் துள்ளதால் என்னைப் பொறுத்த வரையில் பெண்ணைக் கொடுக்க விருப்பம்தான். ஆயின் என் உற வினர் குறை கூறுகின்றனரே என அஞ்சுகின்றேன். தாங்கள் அவசர மான முடிவு செய்யாதீர்கள். என் உறவினர்கட்கு விளக்கம் கூறி ஒப்ப வைக்கின்றேன் என்றார் பெண்ணின் தந்தை.

தாங்கள் எங்கள் மீது எக் குற் றத்தைக் கற்பனையாக கருதுகின்றீர் களோ! அவை எங்களிடம் உண் மையில் இல்லை. ஆயின் தங்கள் குடும்பத்திலும் பொத்தல் உள்ளது என்பது தங்கட்கும், தங்கள் உறவி னர்கட்கும் சிந்தித்தால் புரிந்து விடும். தாங்களாகக் கடிதம் எழு தவே, 'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்ற நல்ல கருத்தோடு தங்களிடம் பெண் பார்க்க வந்தோம் எங்கட்குத் தாங்கள் பெண் கொடுக் காவிட்டாலும் வருத்தமில்லை. மற்ற வர்களை வீணாக இழிவு படுத்தாம லிருப்பது நல்லதாகும். குற்றமும் குறையும் இருப்பதால்தான் நாம் உலகில் மனிதராகப்பிறந்துள்ளோம் இல்லையேல் நமக்குப் பிறவி ஏது? திருத்திக் கொள்ளத்தான் மனிதப் பிறவியை நமக்கு இறைவன் வழங் கியுள்ளார். இன்னாருக்கு இன்ன வள் மனைவியாக வேண்டும் என்பது ஏற்கனவே இறைவன் முடிவு செய் துள்ளார். அதையறியாமல் நாங் கள் இங்கு வந்துள்ளோம். இறை வன் தங்கள் உறவினர் மூலமாகத் தடுத்து அறிவுறுத்தி யுள்ளார். எனக்கு ஒன்றும் வருத்தமில்லை. நம்முடைய நினைப்பில், முயற்சியில் எதுவும் நடப்பதில்லை என்பதை நாம்உணர்ந்து உள்ளத்தில் அமைதி பெறவேண்டும். தங்கள் அன்பான உபசாரத்துக்கு மிக்க நன்றி. தாங் கள் எங்கள் ஊருக்கு ஒருமுறை விருந்தினராக வர வேண்டுகின் றோம். எனது மகன் திருமணத் துக்கு அவசியம் வரவும், என்று இலட்சியவாதி குடும்பத்தோடு ஊர் திரும்பிவிட்டார்.

நான்கு நாட்கள் நகர்ந்தன. சிங்கப்பூரிலிருந்து இலட்சியவாதி யின் பங்காளி முறையைச் சார்ந்த ஒரு சகோதரி குடும்பத்தோடு அவ் ஊருக்கு வந்தாள். இலட்சியவாதி வரவேற்று உபசரித்தார்.

"தம்பி! என் மகளைத் திருமணம் செய்து கொடுக்கவே நம் நாட்டுக்கு வந்தேன். அந்த நாட்டில் தக்க வரன் கிடைக்க வில்லை. உங்களுக் குப் பிள்ளை இருக்கிறானா? அதோ நிற்கும் பிள்ளை யார்? உங்கள் ஜாடையாகவே உள்ளானே" என் றாள் சிங்கப்பூர் சகோதரி.

(தொடரும்)

# அருள் தரும் ஆறுமுகன்!

அன்பு மணம் கமழும்
அறிவுத்தேன் சோலையிலே
அருள் தரும் ஆறுமுகன்
திருமுகம் நான் கண்டேன் (அ)

இன்ப வளம் பெருக்கி
என் நெஞ்சைத் தான் உருக்கி
அன்பினைச் சொரிந்தான்
அருளாட்சி புரிந்தான் (அ)

உலகை ஆக்கி வைத்து
ஒளிச்சுடர் தேக்கி வைத்தான்
ஒப்புமை யாதும் இல்லா
"ஓம்" எனும் பிரணவத்தான் (அ)

அலகிலா அரிய வனும்
அடியார்க்கு எளிய வனும்
ஆலகால விட முண்ட
அரன் தரு திருமகனும்! (அ)

— துறையூர் ஆர். சாமிநாதன்

# ★ அத்வைதம் ★

தொ. பொ. மீனுட்சிசுந்தரனுர்,
[எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.,] — சென்ற மாதத் தொடர்ச்சி.

அத்வைதம் தமிழ் நாட்டில் வடமொழியில் வளர்ந்த வரலாற்றினும் தமிழ் மொழியில் வளர்ந்த வரலாறே சுவைமிக்க தொன்ரும்; புதுமை நிறைந்த தொன்ரும். மேலே கூறிய சித்தாந்த லேச சங்கிரகம் ஒரு கொள்கையை சுட்டுகிறது (1,134) அத்வைதத்தினை வடமொழி உபநிடதச் சொற்கள் கொண்டு ஓதியுணர வேண்டுமே யன்றி, நாட்டு தொழிக் கொண்டு உணரலாகாது என்பதே அக் கொள்கை. தமிழ் மொழியிலும் அத்வைதக் கொள்கையை விளக்கும் நூல்கள் பரவியதால், முதல் நூல் ஆராய்ச்சி குன்றும் என்ற அச்சமே இந்த கொள்கை எழுந்ததற்குக் காரணமாகும். அத்வைதம் பேசும் தமிழர் வாயினையும், எழுதும் கையினையும் பூட்டி விலங்கிட எழுந்த இந்த முயற்சி பயனற்றுப் போயிற்று. தத்துவராயர் திரட்டிய 'சிவப்பிரகாசப் பெருந்திரட்டில்' எத்தனையோ அத்வைத நூல்கள் தமிழ் நாட்டில் உலவியதனை அறிகின்ரேம். நச்சினுர்க்கினியர், பரிமேலழகர், அழகிய மணவாள நாயனுர் முதலிய பெரியோர்கள் இக் கொள்கைக்கு மாருகத் தொல்காப்பியர், திருவள்ளுவர். நம்மாழ்வார் முதலியோரது பாடல்களைத் திருமறை எனப் புகழ்ந்து போற்றி வற்புறுத்தி வந்தனர்.

மொழி பெயர்ப்பு நூலாக வெளி வந்தவை சிறந்த பாவாணர் வழி வந்ததே இங்குள்ள பெருமை. வேம்பத்தூரார் என்ற அந்தணக் கூட்டத்தினர் தமிழ்ப் பாடல்கள் பாடுவதில் தலை சிறந்தவர்கள். அவர்களைச் சேர்ந்த ஆளவந்தான் மாதவபட்டர் ஞானவாசிட்டத்தின் ஒரு பகுதியினை தமிழில் மொழி பெயர்த்தார். இதன் வழியே திருஷ்டி - சிருஷ்டி வாதம் கூறும் பழுதத வேதாந்தம் பரவலாயிற்று. ஸ்ரீபட்டர் என்பவர் பகவத் கீதையை பரமார்த்த தரிசனம் என்ற பெயரால் அழகாக விருத்தத்தில் மொழி பெயர்த்தார். பின்னர் வெண்பாவில் ஒரு மொழி பெயர்ப்பும் வந்தது.

தமிழ் நாட்டில் அத்வைதத்தினை வளர்த்த தனிப் பெருமை தத்துவ ராயரைச் சேரும். இவர் சூத சங்கிதையிலுள்ள ஈசுவரகீதையை அழகிய தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இவருடைய குருவான சொரூபாநந்தர், சொரூபசாரம் என்ற அத்துவித அனுபூதி நூலைத் தெள்ளத் தெளிய அருளிச் செய்துள்ளார். இந்தச் சொரூபாநந்தருடைய குருவான சிவப்பிரகாசரே பெருந் திரட்டினைத் திரட்டினார் என்ற கொள்கையும் வழங்குகிறது. கலைக் கட்டளை, அனுபூதிக் கட்டளை, என்ற இரண்டு பிரிவில் பலவகைக் கொள்கைகளையும், பலவகைக் கருத்துக்களையும் விளக்கும் பாக்களைப் பல நூல்களில் இருந்தும் திரட்டிய பாடல் தொகுதியே பெருந் திரட்டு. இதனைத் திரட்டியவர் தத்துவராயர் என்றும் கூறுவர். இதிலிருந்து தத்துவராயர் குறுந்திரட்டு என்ற அரிய நூலையும் தொகுத்துத் தந்துள்ளார். இவை தத்துவ நூற் களஞ்சியங்களாகும்.

புலவர்கள் பாராட்டும் கலம்பகம், பரணி, பிள்ளைத்தமிழ், முதலிய பிரபந்த வகைகளைத் தம் ஆசிரியர்மேல் பாடி, அடங்கன் முறை என இவர் உலகிற்கு உதவியுள்ளார். இவை அத்வைத ஊற்றுகள். அஞ்ஞானத் தோடும், மோகத்தோடும் எழுந்த போராட்டத்தில் அறிவு வெல்லும் வெற்றியைப் பாடுவனவே அஞ்ஞவதைப் பரணியும், மோகவதைப் பரணியும். இன்று தமிழ் நாட்டில் வேதாந்தத்தினைக் கற்க விரும்புவோர் முதன் முதல் விரும்பிக் கற்கும் சசிவன்ன போதம் என்ற நூல் மோகவதைப் பரணியில் வருவதே ஆம். இந்த நூல்கள் கற்றோருக்கு அன்றி மற்றோருக்கு பயன் தராமை நோக்கி அநுபூதிப் பாடல்களை நாடோடிப் பாடல்களாக தச்சன் பாட்டு, வண்ணான் பாட்டு, பல்லிப் பாட்டு என்று பல வகையில் பாடிப் பாடுதுறை என்ற பெயரோடு வேறோர் உலகிற்கு உதவியுள்ளார். இந்த முறையில் வேதாந்தத்தினைப் பரப்பும் முயற்சி இந்தத் தமிழ் நாட்டில் வேர் கொண்டுவிட்டது எனலாம். மெய்ஞ்ஞானத் தங்கம், மெய்ஞ்ஞானக் கொம்மி, ஞானக் குறவஞ்சி போன்ற நூல்கள் சென்ற நூற்றாண்டு வரை எழுந்து மக்கள் மனத்தினைக் கவர்ந்து வரக் காண்கின்றோம். தத்துவ ராயரது காலத்தினை அறுதியிட்டுக் கூறுவதற்கு இல்லை. பெருந்திரட்டில் சேர்ந்த நூல்களையும், சேராத நூல்களையும் மனத்தல் வைத்துப் பார்த்தால் இவர் 500 ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்று ஒருவாறு கூறலாம்.

தமிழில் வழங்கும் அத்வைத நூல்களில் தலைசிறந்தது கைவல்லிய நவநீதமேயாம். இதன் தெளிவும, இனிமையும், சுவையும் வேறெங்கும் நாம் காணாதவை. இதனை இயற்றியவர் தாண்டவராயர். இது தமிழ்நாடு, மலையாள நாடு முதலியவற்றில் எங்கும் வழங்குவதொன்று. தெலுங்கு நாட்டிலும் இதன் மொழி பெயர்ப்பு, மக்கள் மனத்தினை உருக்குகின்றது.

உ
ஓம் ஸ்ரீகணேசாய நம:

## "வினைகள் பொடிபட"

கணபதி என்றிட விலகும் வல்வினை
கணபதி என்றிட காலனும் கைதொழும்
கணபதி என்றிட கரும மாதலால்
கணபதி என்றிட கவலை தீருமே.

★

ஓம் ஸ்ரீகுகாய நம:

ஆறிரு தடந்தோள் வாழ்க! ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க! குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்சை வாழ்க! யானை தன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க! வாழ்க சீரடியார் எல்லாம்!.

**இந்த இரண்டு பாடல்களும் நாள்தோறும் பாராயணம் செய்வோர்க்கு எந்தவித இடையூறும் வராது.**

வடமொழியில் சங்குகவி என்பார் இதனை மொழி பெயர்த்துள்ளார். ஆனால் அம் மொழி பெயர்ப்பினை வெளியிட்டவர் தமிழ் நூலே மொழி பெயர்ப்பு என்று மன்றுடுகின்றார். இந்த நூல் 18-ம் நூற்றாண்டிற்கு முந்தியது எனலாம்; பாமதீ வியாக்கியானம் பரவுவதற்கு முன் எழுந்த நூல் என்று கூறலாம்.

பிரபோத சந்திரோதயம் என்பது மாதை திருவேங்கிடநாதர் என்ற அரச வள்ளல் 18-ம் நூற்றாண்டில் இயற்றிய தமிழ் நூலாகும். இப் பெயர் கொண்ட வடமொழி அத்வைத நாடகம் உண்டு. அதன் மொழிப் பெயர்ப்பை பெயரைக் கண்டு மட்டும் முடிவு செய்தல் ஆகாது. அதனைத் தழுவித் தமிழ் நூல்களின் கருத்துக்களை ஒட்டி எழுதிய காப்பியமாகும் இந்த நூல்.

ரிபு கீதை என்பது நடராசன் என்பவரால் மிக வெள்ளையான நடையில் எழுதப் பெற்ற நூலாகும். இந்த எளிமை ஒன்றே இதனைத் தமிழ் நாட்டில் பெரு வழக்கினதாகச் செய்தது.

(தொடரும்)

உ

முருகா.

# மூட்டைக்கு மூலிகை!

[கோகிலம்]

இதென்ன மூட்டை? இதற்கு மூலிகை ஏன்? என்றும் சிலர் எண்ணக்கூடும். மூட்டை என்றால் பண மூட்டையா? அல்லது பலசரக்கு மூட்டையா? இந்த மூட்டைகளைப் பற்றி இங்கு குறிப்பிடவில்லை. மனிதர்களின் உடம்பிலுள்ள ரத்தத்தை யெல்லாம் தனக்கு ஆகாரமாக்கிக் கொண்டு சிரஞ்சீவியாக வாழும் மூட்டைப் பூச்சிகளைப் பற்றித்தான் குறிப்பிட்டது.

மக்கள் நோயின்றி ஆரோக்கியமுடன் வாழ எத்தனைப் புதுப் புது மருந்துகளை நவீன முறையில் கண்டு பிடிக்கிறார்களோ, அது போலவே இந்த மூட்டைப் பூச்சி மருந்துகளையும் பலப் பல பெயர்களில் அழகிய டப்பாக்களில் அடைத்து விற்கிறார்கள். இந்த மருந்துகள் ஏராளமாக செலவழிகின்றனவே ஒழிய மூட்டைப் பூச்சி ஒழியவில்லை! ராவணன் சேனைகள் போல ஒன்றுக்கு நூறு ஆக கிளம்புகின்றன. அப்பப்பா! இந்த மூட்டைப் பூச்சி தொல்லை பொறுக்க முடியாமல் பட்டினி கிடந்தாவது விலை மிகுந்த, பல நஞ்சுத் தன்மையான மருந்துகளை வாங்கி வீட்டில் தெளித்துப் பார்க்கிறார்கள். பலன்? ஹூம்... பல்லி, பாசை, தேள், எட்டுக்கால் பூச்சிகள் ஒருவேளை செத்து விழலாம். ஆனால் மூட்டை ஒழிவதில்லை. மனிதர்களில் சிலர் இந்த மருந்துகளின் நஞ்சு வேகத்தால் மூர்ச்சை யாகிவிடுவதும் சகஜமாகிவிட்டது. மூட்டைப் பூச்சிகளை ஜெயித்தோம்! என்று மார்தட்டி சொல்ல முடியாது. ஏதோ மருந்து தெளித்த அன்று வரை சொல்ப தூக்கம் போடலாம், அவ்வளவுதான்.

இப்படி தோல்வி அடைந்து மருந்துகளில் விரக்தி அடைந்துபோய் மிச்சம் மீதியுள்ள மருந்துகளை எங்காவது ஒரு மூலையில் போட்டுவிடுவார்கள். இந்த மருந்து வீட்டில் எப்போதாவது சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு, இந்த பற்றுக்குறை காலத்தில் புருஷன்-மனைவிக்கோ, மற்றவர்

களுக்கோ கோபமும், வைராக்கியமும் உண்டானபோது கண்களில் படும். அவ்வளவுதான்! வீட்டில் ஒரு நபர் காலி. அதோடு எல்லா துயரங்களி லிருந்தும் விடுபட்டுவிடுவார். இருப்பவர்களோ இந்த மூட்டைப் பூச்சி களுக்கு ரத்தத்தை இறந்தவர் பங்கையும் சேர்த்து இரண்டு மடங்காக சேர்த்து கொடுக்க வேண்டும். இப்படி மூட்டைகளும், இதற்கு கண்டு பிடித்த நவீன மருந்துகளும் மார்கண்டேயன் போல சிரஞ்சீவியாக வாழு கின்றனவே! இதற்கு ஒரு முடிவே இல்லையா? என்று கேட்கத் தோன்று கிறதல்லவா? ஆமாம், அதற்குத்தான் 'மூட்டைக்கு மூலிகை' என்ற தலைப்பில் எழுதலானேன்.

என்ன! மூட்டைப் பூச்சி ஒழிய மூலிகை உள்ளதா? என்று ஆச்சர்யப் படாதீர்கள். சற்று சிந்தனை செய்து பார்த்தோமானால் ஆச்சர்யப் படுவதற்கு ஒன்றுமே இல்லை. நாம் தான் இயற்கையோடு ஒன்றி போகும் பாதையிலிருந்து தவறி நவீன பாதைக்குப் போய் விட்டோம்.

உலகத்தில் தோன்றிய சகல ஜீவராசிகளுக்கும், தாவர இனமாகிய இம்மூலிகைகள் தான் அடிப்படை ஆதாரம். மாமிச பக்ஷணிகளுக்குகூட புல் பூண்டை ஆகாரமாகக் கொள்ளும் ஆடு மாடுகள் இல்லாவிட்டால் அதோ கதிதான். பச்சைப் பசேலென தினசரி மார்க்கட்டுகளில் வரும் காய்கறிகள் நின்று விட்டால் நம்முடைய ஆட்ட பாட்டமெல்லாம் அடங்கி விடும்.

மூலிகையினால் இரும்பைக் கரைக்கலாம், பொன்னைக் கரைக்கலாம் வெள்ளியைக் கரைத்து விடலாம், சுண்ணும்பை வெண்ணையாக்கி உண்ணலாம். பாஷாணங்களின் கொடூரத்தை அடக்கி அமிர்தமாக்க லாம். நரை, திரை, இன்றி என்றும் இளமையுடன் இருக்கலாம். இது முற்றிலும் உண்மை! இப்படியெல்லாம் நமது முன்னோர்கள் செய்தும்; வாழ்ந்தும் காட்டினார்கள். நாம் கேவலம் மூட்டைப் பூச்சிகளை ஒழிக்க திட்டமிட்டு இறுதியில் நாமே தற்கொலைக்கும் நவீன மூட்டைப் பூச்சி மருந்துகளால் ஆளாவது எவ்வளவு மதியீனம்! எண்ணிப் பாருங்கள்.

இறைவன் நமக்கு அளித்த அற்புத வஸ்துக்களில் தாவர இனங் களாகிய மூலிகைகள் நமக்குப் பலவிதங்களில் பயன் தருகின்றன. எந்த நோய்க்கும் லகுவில் செலவின்றி எளிதாக எடுத்து பயன்படுத்திக் கொள்ள லாம். ஆனால் ஒன்றுதான் இல்லை, அது எது? மனம். மனது வைத்தால் எல்லாம் கை கூடுமல்லவா?

மூட்டைப் பூச்சிக்கு சத்துருவான மூலிகைகளைப் பற்றி சிலவற்றைக் கூறி வைக்கிறேன் :

(1) **கஞ்சாங்கோரை** அல்லது நாய்துளசி என்று சொல்வார்கள். இது எங்கும் எளிதில் கிடைக்கக் கூடியது. இதை வேண்டிய மட்டும் எடுத்து வீட்டின் படுக்கை அறையின் சுவற்றின் ஓரங்களில் கசக்கிப் போட்டு வையுங்கள், படுக்கையிலும் இலைகளை சிறுக நறுக்கிப் போட்டு படுங்கள். இப்படி படுப்பதால் உடம்பில் உள்ள தலைப்பேன், சீலைப்பேன் கள் கூட ஒழியும் ஒரே வாரம் செய்யுங்கள். ராம பாணத்திற்கு அழிவது போல தானே அழியும். இந்த கஞ்சாங்கோரை உடம்பில் படுவதாலும் அதன் வாசனையாலும் மனத் தூய்மையும் உடல் ஆரோக்கியமும் பெறுமே யல்லாது உயிருக்கு ஆபத்தையும், மற்ற ஜீவ ஜந்துக்களையும் கொல்லாது

(2) **ஆகாசத்தாமரை** அல்லது அந்தரத் தாமரை என்ற மூலிகை. இது குளம், ஏரி போன்ற நீர் நிலைகளில் வளரும். பூமியில் வேர் விடாமல் நீர்மேல் இலையும் உள்ளே வேரும் விட்டு மிதந்து வாழும் மூலிகை. இது வளரும் தடாகத்தில் தண்ணீர் மேல் ஒரே பசுமையாக இருக்கும். இந்த மூலிகையைக் கொண்டு வந்து படுக்கையறை மூலைகளில் நிறையபோட்டு சுவற்றின் ஓரங்களிலும் போட்டு வைத்தல் வேண்டும். இது வதங்கி வாடி அதிலிருந்து கிளம்பும் வாசனை மூட்டைப் பூச்சியை மூட்டை கட்டிக் கொண்டு ஓடச் செய்து விடும் !

(3) **திருநீற்றுப் பச்சை** இது அநேகமாக எல்லோருக்கும் தெரியும் என்றே நம்புகிறேன். குழந்தைகளுக்கு ஜலதோஷம், இருமல், சளி, ஆகிய காலங்களில் ஆபத்துக்குதவும் நண்பனுகவும், இறைவன் அர்ச்சனைக்குரிய பத்ரமாகவும் விளங்கும் இந்த இலையை எடுத்து கஞ்சாங்கோரையைப் பற்றி சொல்லிய பத்தியைப் படித்து அதன்படி செய்து மூட்டைப் பூச்சியை எளிதாகவே ஒழித்துக் கட்டலாம். செய்து பார்த்து பலன் கண்டவர்கள் அடுத்தவருக்கும் தர்மோபதேசம் செய்யலாமே!

ஆமாம்! "நீங்கள் நடக்கிற காரியத்தைச் சொல்லவில்லையே! நகர் புறத்திலுள்ள நாங்கள் இருக்கிற வேலை வெட்டியை விட்டு நாட்டுப் புறங்களுங்கு மூலிகைதேடி போகமுடியுமா என்று கேட்கிறீர்கள் அல்லவா? ஏன் போகவேண்டும்? உங்களைத் தேடித்தான் நாட்டுப்புற வாசிகள் வயிறு பிழைக்க ஓடோடி வருகிறார்களே! நீங்கள் அவர்களை விட்டு நாகரீக கெமிஸ்டுகளை தேடி அல்லவா மூட்டை பூச்சிக்குமருந்து வாங்க ஓடுகிறீர்கள்,

உதாரணமாகச் சென்னை நகர மார்க்கட்டுகளில் எந்த மூலிகைதான் கிடைக்கவில்லை? திருவல்லிக்கேணி ஜாம் பஜார் காய் கடைகளில் காலையில் போய்ப் பாருங்கள்! தற்போது மூலிகை சந்தையாகவே ஆகி விட்டது. நான் ஒருமுறை அங்கு சென்ற பின்புதான் இதை எழுது கிறேன். எதுதான் கிடைக்காது அங்கு, மனம்தான் வேண்டும் பழைய மூலிகைகளைத் தேடிச் செல்ல. சென்று கொண்டு வாருங்கள் மூட்டைக்கு மூலிகையை! ★

(சுபா)

# காட்டாமணக்கு வேர்!

காட்டாமணக்கு வேர் கால் தோலா அறைத்து பசும் பாலில் கரைத்து கால் மண்டலம் சாப்பிட பாண்டு, சோகை, காமாலை வீக்கம் ஆகியவை தீரும்.

காட்டாமணக்கின் முத்துக்கொட்டை பருப்பை பசும் பாலில் அறைத்துக் கொடுக்க பேதியாகும். பெருவயிறு, வீக்கம், வயிற்றுக் கட்டிகள், காமாலை ஆகியவைகள் தீரும். பத்தியம்: மோர் சோறு, மிளகு ரசம் மட்டும் சேர்க்கவேண்டும்.

(வை. சா.)

ஏஜண்டுகளுக்கு:- ஒவ்வொரு தமிழ் மாதமும் மூலிகை மணி இதழ் வெளிவருவதற்கு முன் தங்கள் முன் மாதத்திய பாக்கியை அனுப்பினால் தான் புதிய பத்திரிகை அனுப்பப்படும். அதிக பத்திரிகை தேவையானால் 10-நாட்களுக்கு முன்பே முன்பணம் அனுப்பித் தங்கள் தேவையைக் குறிக்கவேண்டும். விற்பனைத் தொகை வருவது தாமதப்பட்டால், இதழ் அனுப்பப்பட மாட்டாது. — மானேஜர்.

# ★ நேற்று! ★ இன்று! ★ நாளை!

[ ஸ்ரீ ஹரி ]

காலம் என்பது ஒன்றுதான். இது தொடங்கியது எப்பொழுது என்று சொல்ல முடியாது. இது எப்பொழுது முடியும் என்றும் சொல்ல முடியாது. அனுதி அனந்தம் என்னும் காலத்தில் சூரியன் உதித்தல் அல்லது அஸ்தமித்தல் போன்ற சில நிகழ்ச்சிகளையொட்டி வரையரைகளை வகுத்து வழக்கில் புகுத்தியுள்ளது முன் பின் என்ற வகையில் வினவ உரைத்திட நமக்கு ஒரு வாய்ப்பு ஏற்படுவதற்காகவேதான், இதனுல்...

நேற்றைய நிகழ்ச்சிகளை இன்று நாம் நினைவுபடுத்திக் கொள்ளவும், அந்நிகழ்ச்சிகளால் நமக்கேற்பட்ட படிப்பினைகளை யுன்னி நாளைய நிகழ்ச்சிக்கு இன்றே திட்டமிடவும் சாத்தியமாகிறது.

தமிழ் நாட்டில் இன்று நடைபெறும் சில சம்பவங்களை எண்ணி முன் சொன்னபடி நேற்றைய நிகழ்ச்சிகளின் படிப்பினையை யுன்னி, நாளை நடைபெற விருக்கும் நிகழ்ச்சிகளுக்குத் திட்டமிடுதல் அறிவின் முறையாகும். அறிவர்ளிகளின் வழியுமாகும். குறிப்பாக நம் நாட்டு வைத்திய முறைகளை விருத்தி செய்திடும் முயற்சிகளில் நேற்றைய நிகழ்ச்சிகளை யுன்னி, இன்றயை நிலையையும் நிகழ்ச்சிகளின் தரத்தையுஞ் சீர் தூக்கிப் பார்த்து நாளைய நிகழ்ச்சிக்குத் திட்டமிடுவது தான் அறிவின் முறையாகும்.

கிராம முன்னேற்றமென்ற திட்டத்தின் கீழும் சமுதாய திட்டத்தின் கீழுமாக இந்திய அரசாங்கம் சில செயல்களைப் புரிந்து வருகின்றது. கிராமாந்திரங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்கள் முன்னேற்றமடைய வகை செய்வதுதான் இத்திட்டத்தின் நோக்கம். எவ்விதமான திட்டமாயினுஞ் சரி அதனுல் கிராமாந்திர மக்கள் எவவித முன்னேற்ற மடைந்தாலும் சரி - அவர்கள் ஆரோக்கிய வாழ்வு - நோயற்ற வாழ்வு-வாழ்வதற்கு வழியை வகுத்தாலன்றி மற்றைய

திட்டங்களால் பெறும் பயன்கள் யாவும் காட்டில் காயும் நிலவுக்கொப்பாகும். கிராமாந்தரங்களில் வாழும் மக்களுக்கு நோயற்ற வாழ்வை அளிப்பதென்றால் அதற்கான வைத்திய வசதிகள் யாவும் அக் கிராமங்களிலும் கிடைத்திட ஏற்பாடு செய்ய வேண்டுமல்லவா? முழுமைப் பெற்ற வைத்திய வசதி கிடைக்க வேண்டுமானால் அக் கிராமங்கள் நகரங்களாய் மாறவேண்டும். இந்தியாவிலுள்ள லக்ஷோபலக்ஷம் கிராமங்களும் நகரங்களாக மாறிட இன்னும் எத்தனை வருடங்களாகு மென்று எப்படிச் சொல்ல முடியும்?

அதற்கு எவ்வளவு பணம் செலவாகுமென்பதை சிந்திக்கவும் கூடுமா? மேலும் அந்நிலை ஏற்படும் வரையில் கிராமங்களில் வாழும் மக்களின் ஆரோக்கியத்தைக் கவனியாமல் அரசாங்கம் இருக்க இயலுமா? முடியாது. இதற்கு என்ன செய்வது? கிராமாந்திர மக்களுக்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட என்ன திட்டமிட்டுள்ளார்கள்? கிராமாந்திரங்களில் கிடைக்கும் மனிதர் அவர்கள் அறிவு, அனுபவம், செயல் புரியும் திறமை அவ்விடங்களில் கிடைக்கும். வசதிகள் ஆகியவற்றைத் தக்க முறையில் பயன் படுத்துவதாலேயே கிராம மக்களுக்கு நல் வாழ்வை அளிக்க வேண்டு மென்பது மத்திய அரசாங்கத்தின் திட்டம். அத் திட்டத்தையே அனுசரித்து அவர்களுக்கு ஆரோக்கிய வாழ்க்கையையும் அளித்திட வேண்டுமானால் நாட்டு வைத்தியத்தை நாடுவது ஒன்றுதான் வழி. இதனால் உற்ற நோயைப் போக்கிடலாம்.

அனமய - சுகாதார முறைகளைக் கையாள திட்டம் ஏதுமில்லையா? உண்டு. அம்மை குத்தல், கொள்ளை நோய்த் தடுப்பதற்காக ஊசிபோடுதல் சுத்தமான குடி தண்ணீர் கிடைக்க வகை செய்தல், நளிர்ச்சுரத்தை ஒழித்திட திட்டம் வகுந்தல் என்று இப்படி பற்பல திட்டங்களிட்டு உள்ளார்கள்.

இம்முறைகளால் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம் நோயற்ற வாழ்வு கிடைக்கும். உடலைப் பொருத்த வரையில் ஆரோக்யம் கிடைத்தால் மட்டும் போதுமா? மனத்திற்கும் நன்னிலை வேண்டாமா? அஃதில்லாவிடில் உடல் நலத்தால் யாது பயன்? ஒழுக்கம், நற்சீலம் இவைதான் மனதைப் பாறுத்த வரையில ஆரோக்கியத்தை அளிக்க வல்லது. உடலைப் பற்றிய வரையில் ஆரோக்கிய வாழ்வுடன் பண்பு, ஒழுககம், சீலம் முதலிய ஆன்ம குணங்களும் சேர்ந்த வாழ்வுதான் நல்ல வாழ்வாகும். இவ்வகையில் நெறியையுஞ் சேர்த்துச் சுகாதார வழிகளை ஒருங்கே செயல் படுத்திட முயல்வதாயினும் நாட்டு வைத்திய சாஸ்திரங்கள் வகுத்துள்ள முறைகள் தான் நமக்குள்ள ஒரே வழி.

இவ்வாறு உற்ற பிணியைப் போக்கிடவும், முழு ஆரோக்கியத்தை நிலையாகப் பெற்றிடவும் ஒருங்கே உதவி புரிய வல்ல நாட்டு வைத்திய முறைகளைக் கிராமாந்திர மக்களும் பெறுமாறு சென்னை அரசாங்கம் சுமார் 35-வருடங்களுக்கு முன்பே ஒரு திட்டத்தை வகுத்து இந்தியாவுக்கும் வழி காட்டியாயிருந்தது. இவ் வகையில் நாட்டு வைத்திய முறைகளைப் போதித்திட ஒரு பள்ளியை நிறுவி தக்க வைத்தியர்களைப் பயிற்றுவித்துக் கிராமாந்திர மக்களுக்குத் தொண்டு செய்திட அனுப்பியும் வந்தது. இது நேற்றைய நிலை.

பல்வேறு காரணங்களால் இப்பள்ளியில் பற்பல மாறுதல்கள் காலக் கிரமத்தில் ஏற்படவும், அதைத் தொடர்ந்து பள்ளியையே மூடிவிடவும் நேர்ந்தது. இதற்கான காரணங்கள் ஏதாயினும், இன்று மறுபடியும் ஒரு கல்லூரியை நிறுவிட சென்னை அரசாங்கம் செய்துள்ள ஒரு நல்ல முடிவு இன்றைய நிலையாகும்.

இனி நாளை செயலாக்கிட வேண்டிய திட்டம் யாது என்பது மட்டும் விளக்கிடக் கிடக்கிறது. இதை இவ்வாறு செய்யவேண்டுமென்று நான் சொல்வதை விட போக முனிவரின் சீடரான புலிப்பாணி வகுத்த பண்பு மிக்கத் திட்டத்தைச் சொல்லி விடுவது எளிதாகும். வைத்தியப் படிப்பை முடித்த ஒரு சீடன் தன் குருவான புலிப்பாணி முனிவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அச்சமயம் புலிப்பாணி முனிவர் அவனுக்கருளிய நல்லாசிகள் எத்தகையவை!

"ஆமேதான் பண்டிதரே! அரையக்கேளும்
அவனிதனிலெளியோருக் கவிழ்த மீந்து
தாமோதரன் அன்னமிட்டு வஸ்திர மீந்து
தயவாகத் தன்னுயிர் போல் அவரைக் காத்து
தீமைதான் வாராமற் புண்ணியவானாய்
தீர்க்கமுள்ள வைத்தியனாயிருந்து வாழ் வாய்..."

இவ்வாறு சீடனை வாழ்த்திய புலிப்பாணி முனிவர்......தனது குருநாதனான போக முனிவர் தன்னை நல்லாசிக் கூறி, தனக்குற்ற கடமை குருவுக்கும் குருகுலத்திற்கும் பட்ட நன்றி கடனை மீட்கும் வழியையும் விளக்கி அதை மனதில் வருத்திக் கொண்டு, அதையே தனது சீடனுக்கும் தெரிவிப்பதாகவும் அறிவிக்கிறார்.

"...நாமேதான் போகருட கடாக்ஷத்தாலே நலமாக புலிப்பாணி நவின்றி விட்டோமே" என்று.

இது நான் உன் தலையில் சுமத்தும் கடமைக் கடன் அல்ல. இது நமது பண்பு மரபு. இதைத்தான் எனக்கு என் குருநாதன் பணித்தருளினர் இதையேதான் நான் இன்று உனக்குந்தெரிவிக்கிறேன். இந்நற்பொறுப்பை ஒரு கடமையாக ஏற்றுச்செயல் படுத்திடுவாய் என்று பொருள்பட அருளினர் புலிப்பாணி முனிவர்.

"ஐய! தங்களாணையைச் சிரத்தாலேற்று அவ்வாறே செய்து வருவேன்;" என்றான் சீடன். இதுதான் நாம் நாளை செய்ய விருக்கும் செயல் திட்டமாகும்.

ஆனல் இன்று ஒரு சந்தேகத்தையும் சிலர் கிளப்பலாம். புலிப்பாணி முனிவர் தன் சீடனுக்கு அன்று உபதேசித்தது அன்றைய நிலைக்கேற்றதாக இருக்கலாம். இன்று அவர் வகுத்த வகையில் ஒரு நாட்டு வைத்தியன் செயல் பட்டிடுவானாயின் அவன் வாழ்வது எப்படி? தன்னிடம் வரும் நோயாளிகளுக்கெல்லாம், தருமத்திற்கு மருந்தைக் கொடுத்து அன்னமிட்டு வஸ்திரமீந்து......வருவானானல் அவன் தன் வயிற்றை வளர்த்திட அவன் செய்யும் வைத்தியத் தொண்டு உதவுமா?

நன் முறையில் வைத்தியத் தொண்டு புரிவது வைத்தியனின் கடமை. தன் கடமையைத்தான் செய்து வருவானானல் அதுவே அவ் வைத்தியனுக்குப் பலவிதத்திலும் உதவி புரிந்திடும். எப்படி?

" பணமாய்ச் சிலதும்
பண்பாய்ச் சிலதும்
பாரினில் நற் புகழும்
அறமாய்ச் சிலதும்
அன்பாய்ச் சிலதும்
அனுபவமாய்ச் சிலதும்
மறையருள் மாகலை மலர்ந்திடவும் தரு
பலர் பிணி தீர்த்திடவும்
பரமனினி அருளும் பற்பலர் நட்பும்
பயந்திடும் வைத்தியமே!"

(முற்றும்)

— (அமுது மலர்)

# இதய ஒலி!

★ ★ ★ ★

5—3—'66.
முகாம் : திருச்செந்தூர்.

அன்புடையீர்! வாழி நலம்.

தங்கள் கடிதம் வந்தது. கட்டுரையனுப்புவேன் நேற்று முன்தினம் 52-கடிதங்கள் எழுதினேன். நேற்று 25-கடிதங்களுக்குப் பதில் எழுதினேன். நேரம் கிடைப்பது "குதிரைக் கொம்பு" போல இருக்கிறது.

'மூலிகை மணி' வளம் பெற்று வளர்ந்தோங்க செந்தில்நாயகம் திருவருள் புரிவர்ராக. செந்திலாண்டவன் அருட் பிரசாதம் அனுப்பி உள்ளேன். 11—3—66 லட்சதீபம் காங்கேயநல்லூருக்கு வருக!

ஆசிரியர்,
திருப்புகழமிர்தம், சென்னை.

அன்பன்,
கிருபானந்தவாரி.

---

15—3—'66.

அருள்மிகு மருத்துவ ஐயா அவர்களுக்கு, வணக்கம். திருச்சி-2.

தங்களின் பங்குனி இதழின் தலையங்கத்தைக் கண்டு மிக மகிழ்ச்சி அடைந்தேன்.

............"காணக் கண்கள் கூசும் காட்சிகளைப் படம் பிடித்து காதால் கேட்கப்படும் வசனங்களும், பாடல்களும், வாலிப உள்ளங்களில் போதை உணர்ச்சிகளையும், காம வெறிகளையும் கிளப்பி ........." என்ற வரிகளைப் படிக்கும்போது நான் கண் கலங்கினேன். நான் திரைப்படம் பார்ப்பதை விட்டு மூன்றரை ஆண்டுகள் ஆகின்றன. இனி என் வாழ்நாளில் திரைப்படமே பார்க்கமாட்டேன். நான் ஒரு 10 பேர்களையாவது என் வழிக்கு கொண்டு வந்து விடுவேன் நிச்சயமாக.

இங்கு ஒரு சமயம் "காதலிக்க நேரமில்லை" ஹிந்திப் பதிப்புக்கு படம் எடுத்துக்கொண்டிருந்தார்கள், அதில் கிஷோர் குமார், சசிகபூர், கல்பனா, போன்ற ஹிந்தி நடிக, நடிகையும் ராஜஸ்ரீ என்ற தமிழ் நடிகையும் நடித்து கொண்டிருந்தார்கள்.

இந்த கல்பனுவும், ராஜஸ்ரீயும், உடுத்தியிருந்த உடையும், மேல் தாவாணி கூட இல்லாது மிக மோசமாக என்னமோ ' திக் ' உடையாமே உடை உடுத்தி நடித்துக் கொண்டிருந்தார்கள். அங்கு இருந்த கூட்டத்தை நான் நோட்டம் விட்டேன், கூட்டத்திலிருந்த பெண்களில் ஒரு ஏக்கப் பார்வையும், ஆண்களில் அத்தனை பேரும் ஒரு வெறிப் பார்வையோடு அவ்விரு நடிகைகளையும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கூட்டத்தில் ஒருவர் விரக்தியோடு சொன்னார், பொம்பளையை தொட்டு நடிக்கிறதுன்னு என் சொந்த செலவிலேயே நடிக்கத்தயார். என் நடிப்புக்கு கூலியே வேண்டாம்'' என்று எவ்வளவு வெறியிருந்தால் இப்படி பேசியிருக்க வேண்டும்.

ஷ நடிகைகள் மட்டும் எங்காவது தனியாகப் போய்க்கொண்டிருந்தால் (அந்த உடையோடு) நம் தன்மானத் தமிழர்கள் அவர்களின் அங்கங்களை கடித்துக் குதறியிருப்பார்கள், குதறி.

சில நாட்களுக்கு முன் மதுரையில் பட்டப்பகலில் ஓடும் பஸ்ஸில் ஒரு பெண்ணின் மார்பாகத்தை ஒரு வெறியன் கடித்து விட்டானும். பஸ்ஸில் உள்ளவர்கள் எவ்வளவோ அவனை நையப் புடைத்தும், அவன் தன் வெறித் தன்மையை விடவில்லையாம். இதுபோல் எத்தனையோ சம்பவங்கள், போதைக் காட்சிகளின் வெறி ஏறியதால் நிகழ்ந்து வருகின்றன. திரைப்படம் காணும் தமிழனே உன் கதி இதுவா?

நீ கெடுவதும் இல்லாமல் தாய்க்குலத்தையும் கெடுக்க வைக்கிருயே! சிந்தையைக் கெடவைக்கும் சினிமாக்கள் என்று ஒழியப்போகிறதோ அன்றுதான் தமிழனின் தன்மானம் நிலைக்கும்,

த. நடராசன்,
11, சிந்தாமணிக் கடை வீதி.

---

12—3—,66
ஸ்ரீவைகுண்டம்

அன்புடையீர்! வணக்கம்.

தாங்கள் அன்புடன் அனுப்பிய அருகம்புல் ரஷையை அணிந்துள்ளேன். அது வந்தவுடனே மகத்தான சாதனை புரிந்துள்ளேன். கருணையுடன் அனுப்பிஉதவியதற்கு மிக்க நன்றி,

ஆர். பாலசுப்பிரமணிம்,
ராமசாமி லஞ்ச் ஹோம்.

12—3—'66.
காந்தி நகர், திருப்பூர்.

அருளுளம் படைத்த ஐயா அவர்களுக்கு,

நேற்று மூலிகை மணி கிடைத்தது. மகிழ்ச்சி. மது மாமிச உணவுகளை விட சினிமா மக்கள் சமுதாயத்தைக் அதிகம் கொடுக்கிறது. இது முற்றிலும் உண்மை.

க. பரஞ்சோதி.

---

16—3—'66.
சங்கரநயினார் கோவில்

சித்த வைத்திய தலைவ !

வணக்கம். என்னிடம் ஒரு சந்தேக நோய் குடிகொண்டிருந்தது. அதன் விபரம் :- ஆங்கில (சாக்கடை) வைத்தியம் பண்ணுபவர்களிடம் நோயாளிகள் சென்றால் உயிரை அடகு வைத்துத்தான் செல்லவேண்டும். நாட்டுவைத்தியர்களது நிலையோ பரிதாதபத்திற்குரிய அரைகுறையாக தெரிந்த அளவிலே பாரம்பரியம் கடந்து தன்னைப் பெரிய வைத்தியன் என்ற விளம்பரம் ஏமாற்றங்கள் பல குடிகொண்டிருக்கும்! வைத்திய ஏடுகளைப் புரட்டினால் அம்மாவோ உயிர் கொலை பல இருக்கும். எழுத்துக்களின் வழுக்கள் மலிந்து விளங்கும். அச்சிட்ட பல ஏடுகளும் அன்னதே மனத்தால் நினைக்கவோ பயங்கரம். அதனைக் கையாண்டு வைத்தியஞ் செய்யின் நல்லனவற்றிற்கு மாறான பலன்களே கிடைக்கும். சிறந்த நூல்கள் தமிழகத்திலே இல்லையா? என்ற வினாவில் எல்லாவற்றிக்கும் சந்தேகமனப்பான்மையான நோய் பல ஆண்டுகள் இருந்து வந்தன.

1962-ம் ஆண்டில் தமிழ்நாடு செய்த பூர்வீக புண்ணியத்தின் பயனாக தாங்கள் "நம் நாட்டு மூலிகைகள்" கட்டுரையினை தினமணி பத்திரிகையில் கண்டேன், என் மன நோய் அகன்றது. இப்பொழுது மூலிகை மணியும், நூல்களும் வரப்பெற்றுக்கொண்டிருக்கிறேன். உங்கள் லட்சிய வாழ்வு வெற்றி பெற்று சிறந்து நீடித்து விளங்க அம்மையும் அப்பராக விளங்கி அருட்கருணை வழங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீ கோமதி சமேத ஸ்ரீ சங்கரலிங்கப் பெருமானை வாழ்த்துகின்றேன். நமஸ்காரம்.

கே. எஸ். நெடுஞ்செழியன்,
ஜமீன், எண்டத்தூர் போஸ்டு.

22—3—'66

உயர்திரு ஐயா, மதுராந்தகம் தாலுக்கா.

அவர்களுக்கு எனது உளங்கனிந்த வாழ்த்துக்கள். தங்கள் மூலிகை மணியை கையில் எடுத்ததுமே முருகன்மேல் பக்தியும் மனதுக்கு ஆனந்தமும் உண்டாகின்றன. தங்கள் இதழை யான் காணுவதற்கு முன்பு சதா புணர்ச்சி என்ற நெருப்புடன் விளையாடிக்கொண்டு கெட்ட எண்ணத்துடன் கூடிய நண்பர்களோடு இணைந்து சினிமா செல்வதும், அங்குவரும் பெண்களை குறும்பு செய்வதும் சண்டைக்கிழுப்பதும் சிற்றின்பமே தெய்வமென நினைத்து அதையே சதா நினைத்து உருகி உருசி அறிவு மங்கி ஒளி இழந்து பலமிழந்து பல வழிகளிலும் கெட்டு நொந்து வேதனை அடைந்தேன். இந்த வேதனைக்கு ஆறுதலாக மூலிகை மணி வந்தது, படிக்க படிக்க எனது உள்ளம் தீய பழக்கங்களிலிருந்து நழுவி நல்லொழுக்கத்தை நாட ஆரம்பித்தது சீட்டியடித்து சினிமா பார்க்கும் நண்பர்களையும் மெதுவாக கைகழுவி விட்டேன். அதுமட்டுமல்ல நான் உண்மையாகவே சொல்லுகிறேன். சினிமா பார்ப்பதில்லை, புலால் உணவையும் மறுத்துவிட்டதுடன் வீட்டில் செய்யும் மாமிச உணவுகளை கண்டாலே குமட்டல் வரும். என் பெற்றோர்கள் புலால் உணவை நிறுத்தியதற்கு வருத்தம் பட்டார்கள். என்றாலும் நல்லவழியில் திருந்தி வருவதைக்கண்டும் எல்லையில்லா மகிழ்ச்சியும் அடைந்தனர். இவைகளுக்கெல்லாம் உங்கள் **மூலிகை மணி** தான் காரணம். மூலிகை மணி தமிழகமெங்கும் முரசு கொட்டட்டும் தங்கள் புகழ் உலக மெங்கும் பரவட்டும் என்று திருமுருகனை வணங்கி வழிபடுகின்றேன்.

ஜமீன் எண்டத்தூர் (போஸ்டு) எஸ். பி. தங்கராஜ்.

---

17—3—'66.

வைத்திய சித்தரே! வணக்கம். திருச்சி ஜில்லா.

தங்கள் மருத்துவத் தொண்டு சித்த மருத்துவத் துறைக்கு புத்துயிர் அளித்துள்ளது. தாங்கள் மூலிகைகளுக்கு விளக்கம் தரும்போது, அதன் பூர்வ வரலாற்றை ஆத்மீக உணர்வோடு இணைத்து மூலிகைகளின் தன்மைகளை விளக்குவது பாலோடு தேன் கலந்து ஊட்டுவது போல் இருக்கிறது. தமிழ் மருத்துவ மகிமையையும் ஆத்மீக உணர்வையும் ஒரே நேரத்தில் உணரும்படி செய்கிறீர்கள். இத் தொண்டினை தாங்கள் நிரம்பட செய்துவர இறைவன் தங்களுக்கு நீண்ட ஆயுளைத் தருவாராக.

டி. தாமோதரன்,
பெரிய கடைத்தெரு, அரியலூர் போஸ்ட்

---

மூலிகை மணி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடுபவரும், ஆசிரியரும் ஆ. இரா. கண்ணப்பர், 33-1, தென்னமரம் தெரு, வேலூர். (வ. ஆ.)